[illegible]

[illegible] 10 [illegible] 11, 12

July August 1937

0072 11, N252 SN
N37.10.11,12
186960

102

REGD No. M. 3400

6 -JUL 1937

உ
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.
சைவமுந் தமிழுந் தழைத்தினி தோங்குக.

சிவநேசன்

செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

ஆண்டு க0. ⁅ பலவான்குடி, ஈசுவர-ஆனி, ஆடி ⁅ திங்கள். கக, கஉ.

எண்.	உள்ளுறை.	பக்கம்.
	பத்தாவது ஆண்டுத் தொகுதி	1—4
1.	இறைவனருளால் ஈரைந்து நிறைவு	269
2.	அன்பர்களை வேண்டிக்கொள்வது ...	272
3.	திருநந்திதேவர் ...	273
4.	தமிழரின் சைவம்	281
5.	இராமகிருஷ்ண பரமஹம்ஸர் அசைவரே ...	282
6.	சாதிமுறைகெட்ட சைவம் ...	285
7.	ஆங்கிலம் படித்த சைவர் ...	287
8.	கிரீடம்	289
9.	உடற்பு மூவகைப்படும் ...	291
10.	தஞ்சைநகரில் நடந்தகலைவாணர் கூட்டம் ...	292
11.	அணிலாடு முன்றிலார் ...	293
12.	மகா கும்பாபிடேகங்கள்	...297-300
13.	சுலோகபஞ்சக விஷயம்	(109—116)

ஆசிரியர்:— ராம. த. ராம. இராமசாமி செட்டியார், பலவான்குடி.

செய்தித்திரட்டு.

உளூர்:—குமாரவிநாயகர் திருக்கோயிலிலும், நகரசிவாலயத்திலும் ஆனி௴ ௩௰௨ உத்திரநாள் நடராசரபிடேகமும் தெரிசனமும் நடைபெறும். திருவாசக பாடசாலையில் ஆனி௴ ௨௮ மகநாள் மாணிக்கவாசகர் குருபூசையும், அதை யொட்டி குமாரவிநாயகர் திருக்கோயிலில் ஆராதனைகளும், மாணிக்கவாசகர் திருவுலாவும் செய்யப்பெறும்.

கோநகர் ஞானசம்பந்தநற்சபையின் 25-ம் ஆண்டுநிறைவுவெள்ளிவிழா:— வெள்ளியங்கிரி யமர் விமலனருளால், கோநகர், கற்பகவிநாயககலாசாலை, ஞானசம்பந்த நற்சபை, வாணீமந்திர புத்தகசாலை என்னுமிவற்றின் 25-ம் ஆண்டு நிறைவு வெள்ளிவிழா, ஈசுவரவருஷ வைகாசி௴ ௨௨ வெள்ளிக்கிழமை தேவகோட்டை, குமாரஜமீந்தார், திருவாளர், அள. அரு. சோமநாதன்செட்டியாரவர்கள் தலைமையிற் கூடியது. திரு, சங்கரநாராயண தேசிகரவர்கள் கடவுள் வாழ்த்துப் பாட, சபைத்தாபகரின் திருவளர்செல்வர், சு. மு. பழநியப்பசெட்டியாரவர்களால் வரவேற்புப்பத்திரம்வாசித் துவழங்கப்பெற்றது. தலைவர்முன்னுரைகூறினர். திருவாளர்களான கொப்பனாபட்டிக்கலைமகள்கல்லூரித்தமிழ்ப்பண்டிதர், பொ. இராமமூர்த்திஐயர் "காலசக்கரம்" மேலைச்சிவபுரிச்சன்மார்க்கசபைமாணவர், க. இராமமூர்த்தி "ஆதிரைகற்பும் சாதுவன்பொற்பும்" ஆத்தன்குடி தி. ப. ஜெகதீசய்யர் "நமது கடமை" காரைக்குடி சேவு. மெ. மெய்யப்ப செட்டியார் "முப்பெருநிலையம்" மூத்த. வெ. சொக்கலிங்கச்செட்டியார் "சமயம்" திருவையாறுராஜாகாலேஜ் மாணவர்கோநகர் பெ. சித. வி. திருநாவுக்கரசு "தந்தைமகற்காற்று நன்றி" தேவகோட்டை பாலகவி, வயிநாகரம், வே. இராமநாதன் செட்டியார் "சமய மாட்சியும், தமிழ்மொழி ஆட்சியும்" மதுரை உயர்தரநீதி மன்றத்து வழக்கறிஞர், திரு, T. C. ஸ்ரீநிவாஸய்யங்காரவர்கள் "சபை" என்பன பற்றி செவ்விய முறையில் சிறந்த சொற்பொழிவுகள் செய்தார்கள். இடையே க. வி. க. மாணவர்களான: வை. தையலெட்சுமி "பெண் கல்வி" சு. பழநியப்பன் "செம்மை அண்ணல்" மு. காவேரி "தமிழ்த்தாய்" ஆ. பெரியையாவும், கு. சின்னையாவும் சம்பாஷணையாகத் "தமிழ்க்கல்வி" பழ. முருகப்பன் "பண்டையநாளுந்தண்டமிழ்ப்புலவரும்" பெ. மெய்யப்பன் "தொண்டர்தம் பெருமை" என்பன பற்றித் தங்கள் இனிய மழலை மொழிகளால் மாண்புறப் பேசினர். தலைவரவர்கள் முடிவுரை கூறினர். வந்தன வாழ்த்துக்களுடன் சபை இனிது நிறைவேறியது.

திருவம்பர்மாகாளம்:—திருஞான சம்பந்தப்பெருமானாரின் தேவாரத் திருப்பதிகம் மூன்றுள்ளதாகிய இத்திருத்தலத்தின்கண் ஸோமயாக மகோற்சவத்தை வைகாசி ௨௧, ௩௰ ஆனி ௧, ௨ களில்வழக்கம்போல்தர்மகர்த்தர்களாகிய க. ப. இராமநாதன் செட்டியார், எஸ். பழநிக்குமாரசாமிபிள்ளை ஆகிய இருதிருவாளர்களும் இனிது நடாத்தினர்.

திருவாமாத்தூர்:—கௌமாரமடாலயம் மகான் வண்ணச்சரபம் திருப்புகழ்ச் சுவாமிகள் முருகதாச சுவாமிகள் எனவழங்கும் உயர்திரு தண்டபாணி சுவாமிகளது (முப்பத்தொன்பதாவது) மஹாகுருபூசை ஆனி௴ ௧௬ திருவோணநாளில்கௌமாரமடாலயத்தில் அபிடேகஅலங்காரதீபாராதனை திருவுலாமஹேஸ்வரபூசை உபந்நியாசம் ஆகிய சிறப்புகளுடன் ஷை சுவாமிகளின் நன்மாணவரும் திருக்குமாரருமான திருவாளர், செந்தி ஜயகம்பிள்ளை யவர்களால் நன்கு நடைபெற்றது.

உ

சிவமயம்.

சைவமும் தமிழும் தழைத்தினி தோங்குக.

OFFICE OF THE RE[GISTRAR] 17 JUL 1937

பலவான்குடி

"சிவநேசன்"

பத்தாம் ஆண்டுத் தொகுதி.

தாது ஆவணி முதல் ஈசுவர ஆடி வரை

பலவான்குடி

"சிவநேசன்" அச்சியந்திரசாலையிற்

பத்திராதிபர் ராம. கு. ராம. இராமசாமி செட்டியாரால்

அச்சியற்றி வெளியிடப் பெற்றது.

1937

சென்னைப் பதிவு எண் 3460.

உ

சிவமயம்.

சைவமுந் தமிழுந் தழைத்தினி தோங்குக.

"சிவநேசன்"

பத்தாவதாண்டின் உள்ளுறை.

கட்டுரையின் பெயர்.	எழுதிய திருவாளர்கள்.	பக்கம்.
அணிலாடு முன்றிலார்	... சேஞபதி நடேசசெட்டியார்	293
அப்பர் படக்காட்சிக்கு ஆதரவு	... கி. சு. சம்பந்தசாமி	65
அன்பர்களை வேண்டிக்கொள்வது	... சிவநேசன் இராமசாமி	272
ஆங்கிலம் படித்த சைவர்	... ஆ. ஈசுரமூர்த்திப் பிள்ளை	287
ஆசௌசம் அனுஷ்டிக்கும் நியமம்	... ச. பொன்னுஸ்வாமிக்குருக்கள்	204
ஆரம்பஆசிரியர்களின் சொந்தப்படி	... A. முக்கையப்பிள்ளை	160
ஆரோக்கிய வழி	K. P. சுப்பிரமணிய சிவாசாரியார்	37
ஆலய தரிசனம்	... ச. குமாரஸ்வாமிக்குருக்கள்	89
ஆளுகை யாரவாரம்	... பத்திராதிபர்	1
இந்தியர் ஜனத்தொகை	... S. V. கோதண்டராமையர்	159
இந்திய ராஜப்பிரதிநிதிக்கு வரவேற்புப் பத்திரம்	பர்மா நாட்டுக்கோட்டைச் செட்டியார் சங்கத்தினர்	175
இயற்கை வைத்தியத்தின் மேன்மை	கி. லக்ஷ்மணசர்மா B. A. B. L. ND	57
இராமகிருஷ்ணபரம ஹம்ஸர் அசைவரே	ஆ. ஈசுரமூர்த்திப்பிள்ளை	282
இறைவரருளால் ஈரைந்து நிறைவு	... பத்திராதிபர்	269
ஈசுவர கிருபை	... பத்திராதிபர்	209
உடம்பு மூவகைப்படும்	... நல். கண்ணப்ப முதலியார்	291
உண்மை அறிவிப்பு	... ஒரு மாணவன்	54
உபதேசம்	... பத்திராதிபர்	189
உவகை மொழிகள்	... பலவான்குடி நகரத்தார்	71
எலிமயிர்க்கம்பலம் அல்லது பனிப் பகைப்படாம்	சேஞபதி நடேசசெட்டியார்	151
ஒரு பெரியார் பிரிவு	... பத்திராதிபர்	132
ஒரு வினு	... ஒரு மாணவகன்	147
ஒற்றுமை	... பத்திராதிபர்	93
கடவுளுஞ் சிவனும்	... ஆ. ஈசுரமூர்த்திப் பிள்ளை	202
கந்தபுராணம் காப்புச் செய்யுளின் உரைவிளக்கம்	சேஞபதி நடேச செட்டியார்	124
கந்தபுராணக் காப்புச் செய்யுளின் உரை விளக்க மறுப்பு	ச. பொன்னுஸ்வாமிக் குருக்கள்	146

18696

கம்பர் செந்தமிழ்ச்சங்கத் தலைமையுரை	ந. மு. வேங்கடசாமி நாட்டார்	19
கலியின் சுபாவமும் அதைநீக்கும் விதமும்	ச. குமாரசுவாமிக் குருக்கள்	92
கல்யாணப் படித்துறை	... உ. வே. சாமிநாதையர்	45
கனம் மந்திரியவர்களின் கண்ணிய உரை	கனம் குமாரராஜா	77
காந்தியம் 'தக்காரும்'	... ஆ. ஈசுரமூர்த்திப் பிள்ளை	170
கிரீடம்	... வேங்கடநாராயண சர்மா	289
குச்சுக்காரி வீடுகளிற் காந்தி	... ஆ. ஈசுரமூர்த்திப் பிள்ளை	170
குறுந்தொகை 75-ஞ்செய்யுள் உரையின் ஐயப்பாடு	சேஞபதி நடேச செட்டியார்	127
கூம்பேறும் மரப்பறவை	... ,,	125
சபிண்டீகரணப் பிரமாணம்	... ச. பொன்னுஸ்வாமிக் குருக்கள்	246
சமணைக் கூட்டத்திற் சூலைநோய்	... ஆ. ஈசுரமூர்த்திப் பிள்ளை	141
சாதிமுறைகெட்ட சைவம்	... ,,	285
சீர்பெறுவதெவ்வாறு?	... நல். கண்ணப்ப முதலியார்	224
சென்னை மாகாண ஸநாதன தர்ம மகாநாடு	ஆரியதருமம்	177
சைவக்கூட்டங்களில் அசைவத் தீர்மானம்	ஆ. ஈசுவரமூர்த்திப்பிள்ளை	201
சைவக் கற்பு	... ,,	202
சைவம் நாட்டிய தமிழ்த்தாய்	... ஐயாறு சுவாமிகள்	7, 99, 205, 217
சைவ விரத அனுட்டானம்	... நல். கண்ணப்ப முதலியார்	121
சௌரமானத்திற்கு ஆதாரம்	... K. P. சுப்பிரமணியசிவாசாரியார்	122
தஞ்சை நகரில் நடந்த கலைவாணர் கூட்டம்	தமிழ்ப்பொழில்	292
தமிழரின் சைவம்	... ஆ. ஈசுரமூர்த்திப் பிள்ளை	281
தமிழ் தந்தவளம்	... உ. வே. சாமிநாதையர்	40
தமிழ்நாட்டுப் பெண்மணிகள்	... ,,	173, 213, 261
தமிழ் மொழி	... S. V. கோதண்டராமையர்	159
தனவணிக மாணவர்கட்குச் சன்மானம்	பத்திராதிபர்	97
திருத்தம்	... ,,	129
திருத்தென்குடித்திட்டைத் தேவாரம்	திருஞானசம்பந்தர்	257
திருத்தொண்டர் ஆசிரியவிருத்தம்	... சௌந்தர பாரதியார்	248
திருநந்தி தேவர்	சிவசண்முகமெய்ஞ்ஞானசிவாசாரிய சுவாமிகள்	273
திருநல்லூர்ப் பெருமணம்	... சேஞபதி நடேச செட்டியார்	231
திருமுறைப் பாராயணம்	... நல். கண்ணப்ப முதலியார்	122
தீண்டாதார் ஆலயப் பிரவேசத்தடை	மா. நீலகண்டசித்தாந்தியார்	9, 29, 81, 105, 133, 161, 193
தீண்டாமை	... பிரக்ஞானந்தன்	55
நற்றமிழ் நூல்கள்	... பத்திராதிபர்	157
நாம் ஏன் கடவுளை வழிபடவேண்டும்?	அ. க. பொன்னுசாமி முதலியார்	113
பரம்பரைப்பெருமை	... பத்திராதிபர்	25
பாராட்டுப் பத்திரம்	... நாட்டுக்கோட்டை நகரத்தார்	74
பார்த்திபனும் பண்டைக் கதையும்	... சேஞபதி நடேச செட்டியார்	227

பிறை முழுமதியானது ... உ. வே. சாமிநாதையர் 50
பெரியபுராணவாரப்பிரசங்கஅறிவிப்பு, நாகை சைவசித்தாந்தசபையார் 260
மகா கும்பாபிடேகங்கள் ... பத்திராதிபர் 297
மகுடாபிஷேகம் ... நல். கண்ணப்ப முதலியார் 245
மணிவாசக சங்க அறிக்கை ... மணிவாசக சங்கத்தினர் 249
மணிவாசக சங்கத் தலைவருக்கு வாழ்த்து ,, 259
மணிவாசக சங்கத் திருவிழா அழைப்பு ,, 240
மணிவாசக சங்கம் ... பத்திராதிபர் 241
மதிப்புரை மஞ்சரி ,, 61, 98, 130, 158, 190, 210, 244
மந்திரி கனம் குமாரராஜா அவர்கட்கு வரவேற்பு பத்திராதிபர் 72
மன்னர்க்கும் வரம்புண்டு ,, 101
மாப்பறவை வெண்டினம்; காகம் அல்ல; பருந்தல்ல. } சேதுபதி நடேச செட்டியார் 126
முற்பகற் செய்யிற் பிற்பகல் விளையும் அ. முத்தையப் பிள்ளை 237
மெய்கண்டார் சிவசண்முகமெய்ஞ்ஞான சிவாசாரியசுவாமிகள் 181
வந்தே பிதரம் ... ஆ. ஈசுரமூர்த்திப்பிள்ளை 172
வருங்காலம் ... R வேங்கடராமையர் 247
விதிவிலக்கு ... தி. மா. ஸ்ரீநிவாஸய்யங்கார் 17
விநாயகசதுர்த்தி யாதிய விரத நிர்ணயம் பத்திராதிபர் 66
விபரீத விளக்க மறுப்பு ... சு. முத்துக்குமாரசாமி 147
விவசாயிகளின் கடன் நிவாரணை ... சிலோன் நாட்டுக்கோட்டைச் செட்டியார் சங்கம், கொழும்பு 68
வைணவக் காந்தி ... ஆ. ஈசுரமூர்த்திப் பிள்ளை 169
வையகமதிக்கும் ஐயர் வரவு ... பத்திராதிபர் 67
ஹிந்தியைத் தமிழர் ஏன் கற்கவேண்டும்? செந்தமிழ்வாணன் 268
ஸ்ரீவகாருண்யச் செய்யுட்கள் ... குமாரகுரு 71

சுலோக பஞ்சக விஷயம் பக்கம் 53-முதல் 116-வரை.

சிவநேசனுக்கு வாழ்த்தும் மதிப்புரையும் வரைந்தனுப்பிய திருவாளர்கள்.

பக்கம்.
1. அ. முத்தையப் பிள்ளை, கண்டாச்சிபுரம். 5
2. ஐயாறு சுவாமிகள், திருவாசகபாடசாலை பலவான்குடி. 6
3. கோவிந்தசாமி, பலவான்குடி. ,,
4. பண்டித, அ. கோபாலையர், ஆலங்குடி. 69
5. குமரகுரு, மணவை. 70
6. ஆனந்தகான சபையார், கரிசூழ்ந்தமங்கலம். ,,
7. வ. மு. இரத்தினேசுவரஐயர், தமிழ்ப்பண்டிதர் கம்பை. 119
8. மு. முத்துப்பிள்ளை என்கிற சஷ்டிச் சுவாமிகள், பரிமணங்குடி. 120
9. S. A. முத்தைபத்தேவர், பாலசுப்பிரமணியப்பசுந்தமிழ்க் கழகத்தினர், அசுகூர் கும்பகோணம். 129

---

8 - JUL 1937

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சைவமுந் தமிழுந் தழைத்தினி தோங்குக.

சிவநேசன்.

செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

பலவான்குடி.

ஆண்டு ௧0	ஈசுவர-ஆனி, ஆடி 1937—ஜூலை, ஆகஸ்டு	திங்கள் ௧௧, ௧௨

உடையா னுன்ற னடுவிருக்கு முடையா ணடுவு ணீயிருத்தி
அடியே னடுவு ளிருவீரு மிருப்ப தானா லடியேனுன்
அடியார் நடுவு ளிருக்கும்அரு ளைப்புரி யாய்பொன் னம்பலத்தெம்
முடியா முதலே யென்கருத்து முடியும் வண்ணம் முன்னின்றே.

இறைவரருளால் ஈரைந்து நிறைவு.

உலகமும் பல்லுயிரு மொன்றி நிறைந்தெங்கும் இலகுஞ் சிவனே யாவர்க்குமேலாம்அளவிலாச்சீருடைய இறைவர். அலகிலா விளையாட்டுடையார். அவரருளாணை வழியே உலகம் இயங்குகின்றது. "அவனருளாலே அவன்றாள் வணங்கி" ஆன்மாக்கள் கடைத்தேறுவர். "அவனன்றி ஓரணுவுமசையாது" என்பதுஆப்தமொழி.

பெருங்கருணைத் தடங்கடலாகிய பிறையணி பெருமான் திருவருளால் பாவலர் புகழும் பலவான்குடியினில்பிலவங்கவருடம் தை மாதத்தில் திருவாசகத் திருக்கூட்டம் தோன்றியது. அதிலிருந்து சாதாரண ஆண்டு ஆவணித்திங்கள் மூன்றும் நாள் குமாரவிநாயகர் திருக்கோயில், செங்கமலத் திருக்குளம், திருநந்தனவனம், தண்ணீர்ப்பந்தர் ஆகியவைகளுடன் திருவாசகபாடசாலையும் அதன் அங்கமாக மணிவாசக சங்கமும் நிறுவப்பெற்றன. மணிவாசகசங்கத்தின் பதின்மூன்றுவது ஆண்டுநிறைவு பதினான்காவது ஆண்டுத் தொடக்கவிழா நிறைவேறிய உருத்திரோற்காரி ஆண்டு ஆவணித் திங்களில் சிவநேசர் திருக்கூட்டம் கூடுவதென்ற தீர்மானமாகிச்

சிவநேசர் திருக்கூட்டம் செயன்முறைக் குவந்து சீரியதொண்டாற்றி வருகின்றது. சிவநேசர் திருக்கூட்டத்தின் நான்காவது ஆண்டு நிறைவுற்று ஐந்தாவதாண்டு தொடங்கிய பிரபவ ஆண்டு ஆவணித் திங்களிலிருந்து சிவநேசர் திருக்கூட்ட ஆதரவுடன் சிவநேசன் வாரத்தாள் தொடங்கப்பெற்றுப் பலவான்குடியிலிருந்து வெளியிடலாயிற்று. சிவநேசன் தோன்றியநாள் தொட்டு ஆத்திகத்தைப் பரப்புவதே சிறந்ததொண்டாகக் கொண்டு தன் கடமையைத் தளராது ஆற்றிச் சைவவுலகிற்குந் தமிழுலகிற்கும் நலம் பலபுரிந்து வந்த நிலைமையில் நாத்திகர் நடுநடுங்கினர். ஆத்திகர் ஆக்க மிக்கோங்கினர். சைவமுந் தமிழுந் தழைத்தினி தோங்கின. இவ்வாறு ஐந்தாண்டுகள் வாரத்தாளாக வெளிவரலான நம் சிவநேசனைப் புத்தகவடிவுடன் திங்கள் வெளியீடாகச்செய்தால் சிவநேசன் வெற்றுரை சிறிதுமின்றி மேலும் அரியபெரிய கட்டுரைகளைத்தாங்கி என்றுமழியாத் தன்மையில் நின்றுநிலவுதற் கேதுவாகுமென்று உயர்திருவாளர்களான, மகாமகோபாத்தியாய உ. வே. சாமிநாதையர், சுவாமிநாத பண்டிதர், பண்டிதமணி, மு. கதிரேசச்செட்டியார் முதலான பெரியார் பலரின் திருவுள்ளக் கருத்தாகவிருந்து தெரிவித்தமையாலும் வாரத்தாள் நடத்துவதில் பொருட்செலவும் அயராவுழைப்பும் மிகுதியாயிருந்தமையாலும், இதன் பணிபுரிவதுடன் திருத்தென்குடித் திட்டைச் சிவாலயத் திருப்பணித் தொண்டாற்றவும் இறைவர் திருவருளிருந்தமையாலும் ஐந்தாண்டுகள்வரை சிவநேசர் திருக்கூட்ட ஆதரவுடன் நடந்துவந்த இச் சிவநேசனை ஆறாவதாண்டுத்தொடக்கமாகிய ஆங்கீரச ஆவணி முதல்சொந்தமாகக் கொண்டு திங்கள் தோறும் புத்தகவடிவுடன் வெளியிடலாயிற்று. கல்வி அறிவு ஒழுக்கங்களிற் சிறந்த பெரியார் பலர் நல்லகட்டுரைகள் வரைந்துதவினர்; நற்செய்திகள் தெரிவித்தனர்; வாழ்த்துக்களும் மதிப்புரைகளும் வழங்கினர். சிவநேசன், சிவநேசச்செல்வர்கள், செந்தமிழ்ச் செல்வர்களின் சீரியநேசனாக அவர்களைச் சார்ந்து தவழ்ந்து சிறந்து விளங்கினான்; விளங்கி வருகின்றான். அன்பர் பலர் இலவசமாகவும் பொருளுதவியும்சிவநேசனைப்பெற்றுப் படித்து இன்புடையராய்ச் சிவநேசனைப் பாராட்டிச் சீராட்டிப் போற்றிப்புகழ்ந்து ஆதரித்து வருகின்றனர்.

இறைவர் திருவருளால் நம் சிவநேசனுக்கு இவ்வாண்டு ஆடி மாதமுடியப் பத்தாண்டுகள் நிறைவுறுகின்றன. பத்தாண்டுகளாகப் பலவான்குடியில் வளர்ந்த நம் சிவநேசனைத் திருவினுள் மிகுபுகழ்த் தென்குடித்திட்டையின்கண் செழித்தோங்கச்செய்யவும், திருஞானசம்பந்தப்பெருமானருளிய தேவாரத்திருப்பதிகம் பெற்றுள்ள அத்திருத்தலத்தைச் சிவராஜதானியாகவிளங்கச்செய்யவும் இறைவர் திருவுள்ளமிருக்கின்றமையாலும் இச்சிவநேசனுக்குப்பணிபுரிவதுடன் திருத்தென்குடித்திட்டைச் சிவாலயத் திருப்பணியைச் செய்வதன் நிமித்தம் அத்திருத்தலத்தில் நித்தியமாக நிலைத்து வாழுங்கருத்து மிக்குடைமையாலும் சிவராஜதானியாகத் திகழுந்திருத்தென்குடித் திட்டையிலிருந்து சித்தாந்தவித்தியாசாலையின் சார்பாக நிகழும் ஈசுவர ஆண்டு ஆவணித்திங்கள் முதல் ஒவ்வொருதிங்கள் தோறும் இப்போதுள்ள புத்தகவடிவத்துடன் வெளிவர நியதி செய்திருக்கிறது. ஓரிடத்திலிருந்து சிவப்பணி பலபுரிந்துவருதல் பணியாற்றுவோர்க்குப் பெருவசதியுடன் உறுதிபயக்குமென்பது சிறந்தஅறிவாளிகள் ஒப்பமுடிந்ததொன்றாகும்.

சிவநேசமிக்க சீரியோர்களே! நம்சிவநேசனுக்கு ஐந்தாண்டுகள்வரை ஆண்டு ஒன்றுக்குவரிஉள்நாடுகளுக்கு ரூபா மூன்றாகவும் வெளிநாடுகளுக்கு ரூபா நான்காகவும் அப்பால் ஐந்தாண்டுகள்வரை ஆண்டு ஒன்றுக்கு வரி உள்நாடுகளுக்கு ரூபா இரண்டேகாலாகவும் வெளிநாடுகளுக்குரூபாமூன்றாகவும் நியதிசெய்திருந்தோம். சிவநேசனுக்குப் பொருளுதவி ஆதரிப்பார்பலரும் ஆண்டுவரியை அன்புடன் அளித்தும் ஏற்றமிக்கபெற்றியுடையரேயாயினும் தகுந்தபணியாளர்களை நியமித்துப்பணம் வரப்பற்றத் தாழ்த்தமையால் சிலபல ஆண்டுகளாக ஆரம்பகாலமுதலாக ஆண்டுவரிச்செலுத்தவேண்டியவர்களும் பலராகவிருக்கின்றனர். கணக்காலுள்ளபடி அவரவர் செலுத்தவேண்டிய ஆண்டுவரிப் பணங்களைக் கொடுப்பார்களென்றும் அவர்கள் மனமுவந்து கொடுக்கும் அப்பணங்களைத் திருத்தென்குடித்திட்டைச்சிவாலய மகாகும்பாபிடேகத்திற்கு உபயோகித்துக் கொள்ளலாமென்றும் பேரார்வங் கொண்டுளேம்.

பேரன்பர்களே! இனி நம் சிவநேசன் திருத்தென்குடித் திட்டையிலிருந்து வருகிற ஆவணி முதல் உங்கள்பால் உவந்து வருவான். தனது பதினோராம்பிராயத்திலிருந்து பல நலன்களைத் தன்னகத்தே தாங்கி வருவான்; சிறந்த பயன் தருவான். முன்னிலும் பன்மடங்கு பிரியமாகப் போற்றி ஆதரிப்பீர்களாக.

பெரியோர்களே! நம்சிவநேசனுக்கு ஆண்டுவரி ஈசுவர ஆவணி மாதமுதல் ஆண்டு ஒன்றுக்கு உள்நாடுகளுக்கு ரூபா ஒன்றரையாகவும், வெளிநாடுகளுக்கு ரூபா இரண்டாகவும் நியதிசெய்துள்ளோம். ஆண்டுவரிக்காக மூலதனம் எப்போதும்போல உள்நாடுகளுக்கு ரூபா முப்பதும், வெளிநாடுகளுக்கு ரூபா நாற்பதுமே. பதினொராவது ஆண்டுத் தொடக்கத்திலிருந்து திருவருள் கூட்டுமேல் இலவசமாகவே வெளியிடவுங்கூடும்.

இதுவரை நம்சிவநேசனைப் பெரிதும் ஆதரித்து வந்தவாறே இனியும் ஆதரித்துவர மிகப்பணிவுடன் வேண்டிக்கொள்கின்றோம்.

நம்சிவநேசனுக்கு ஆண்டுவரி, அதற்காக மூலதனம், மற்றும் நன்கொடை யாகிய யுதவியும், கட்டுரைகள், செய்திகள் வரைந்துதவியும், வாழ்த்துக்கள், மதிப்புரைகள் வழங்கியும், சிறந்த நூல்வெளியீடுகள் உதவியும் பலவகையானும் பேராதரவு புரிந்த அறப்பெருஞ் செல்வர், அறிவுடைப் பெரியார் ஆகிய பலர்க்கும் என்றும் மாறாத நன்றிபாராட்டுவதுடன் பத்தாண்டுகளாக இவ்வரிய பணியாற்றும் கடமையைத்தந்து பத்தாண்டுநிறைவுக்குமேல் பதினொராவது ஆண்டு ஈசுவர ஆவணிமுதல் திருத்தென்குடித் திட்டையிலிருந்து தொடங்கிப் பணிபுரியவும் செய்த அன்பர் பலர்க்கு அன்பருக்குளித்த எம்மிறைவராகிய ஈசன் திருவருளை எண்ணித்துதித்து இன்புறுவோமாக.

அன்பர்களை வேண்டிக்கொள்வது.

எம் உறவினர்களே! இனியநண்பர்களே! பேரன்பர்களே! சிவநேசப் பெருஞ்செல்வர்களே! சீரிய செந்தமிழ்ச் செல்வர்களே! இவ்வாண்டுத் தொடக்கமுதல் திருத்தென்குடித் திட்டை யென்னும் திருத்தலத்தை நிலைபெற்ற வாசத்தலமாகக் கொண்டு வாழுங் கருத்துடன் கணக்குக் காரியங்களை ஆங்குவைத்து நடத்திவருகின்றமையாலும் சிவநேசன் அச்சியந்திரசாலையை ஆங்குத் தாபித்து சிவநேசனுக்குப் பதினொராவது ஆண்டுத் தொடக்கமாகிய ஈசுவர ஆவணிமுதல் சிவநேசனை அங்கிருந்தே வெளியிட வுறுதிகொண்டிருப்பதாலும் எனக்குத் தனிமையான உரிமையினும் சிவநேசன் சம்பந்தமான முறைமையினும் கடிதமுதலியனவும் கட்டுரைகளும் நற்செய்திகளும் வாழ்த்து முதலியனவும் எழுதித்தருபவர்கள், ராம. கு. ராம. இராமசாமி செட்டியார், திட்டை. S. I. R. என்னும் விலாசத்துடன் அனுப்பித்தருவீர்களாக.

உங்கள் அன்புள்ள,
சிவநேசன், ஓ ராமசாமி.

உ

திருநந்திதேவர்.

(உயர்திரு, சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள் திருமயிலை வெள்ளீச்சரத்தில் 25-4-37ல் நிகழ்த்திய சொற்பொழிவின் குறிப்பு. திரு. நே. த. கிருஷ்ணசாமி முதலியாரவர்களால் எழுதப்பட்டது.)

உலகத்திற் பல ஜீவன்கள் இருந்தபோதிலும் மனிதனைமட்டும் உயர்வாகக் கருதுவானேன்? மனிதனிடத்து ஓர் உயரிய குணம் இருக்கிறது. அதுவே தன்னைப் பற்றி ஆராயும் குணம். இவ்வித அறிவே உயர்ந்ததாகும். இதுவே ஆன்மாவைத் தூய்மைப்படுத்தவல்லது. மற்றவையெல்லாம் ஒரு சமயம் இருந்து மறுசமயம் மறைவன. அவை சிற்சில இடங்களுக்கோ சிற்சில சமயங்களுக்குமட்டுமோ பயன்படுவன.

பின்னர் உடம்புக்கும் உயிருக்குமுள்ள சம்பந்தம் என்ன? உடல் வேறு; உயிர் வேறு. இந்நிலையை அறியக்கூடிய அறிவு இன்னும் நமக்கு வரவில்லை. தற்போதைய நம்முடைய அறிவு ஐந்தாகப் பிரிந்து நிற்கிறது. ஒன்று பலவாகப் பிரியும்போது பலம் குறைவது இயற்கை. பள்ளத்தின் வழி நீர் ஓடுவதுபோல ஐம்புலன்களின் வழி ஓடும் அறிவு கண்ணின்வழியே வெகுதூரம் செல்கிறது. மற்றவை நம்மிடமே உள்ளன. அவை சிறிது தூரத்தில் உள்ளவைகளையே அறியும் தகுதியுடையன.

கண்ணால் பார்க்கப்படுவதே உலகம். ஆங்கிலத்தில் பார்ப்பதற்கு லுக் (Look) என்று சொல்கிறோம். பார்ப்பது லோகம். இது லுக் என்பதன் தாதுவினடியாகப் பிறந்தது. இவ்வுலகத்துப் பொருள்கள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு காரணம் உண்டு. உலகத்தை நன்றாகப் பார்ப்பவனே தன்னைப்பார்க்கிறான். இல்லாதவன் தன்னைப் பார்ப்பது இல்லை. எதிரில் உள்ளதை மட்டும் அறிவது அறிவன்று. இவ்வித அறிவை யுடையவன் மனிதனாகக் கருதப்படமாட்டான். சாதாரண உலகில் பெரியோர் வைத்துவிட்டுப்போன சொத்தைக்கொண்டு காலந் தள்ளுபவனுக்கு மதிப்பு அதிகமா? அல்லது தானாகவே கஷ்டப்பட்டு நெற்றி வியர்வை நிலத்தில் விழச் சம்பாதித்து அதனால் ஆம் பயனை அனுபவிப்பவனுக்கு மதிப்பு அதிகமா? பின்னவனுக்கே மதிப்பு அதிகம் என்று கூறுவதில் தடை சொல்வார் யார்? அதனால் உயர்ந்த பொருள்களைக் காண்பதே அறிவாகும். உலகம் ஐம்பூதங்களால் ஆனது என்று அறிந்து கொள்வதுமட்டும்தானா நம்மறிவுக்குத் தகுதி? நம்மறிவு அதையும் தாண்டிச் செல்லுதல் வேண்டும்.

உலகத்துக்கு வேறொரு பெயர் ஜகத் என்பது. ஜ-தோன்றுவதைக் காட்டும் ஓரெழுத்து. க - மறைவது. இவ்வுலகம் தோன்றி மறைவ

றென்பதை இப்பதம்குறிக்கிறது. தோன்றினபொருள் மறையும்; மறைந்த பொருள்தோன்றும். ஐந்து பூதங்களும் ஒரே காலத்தில் இருந்ததுஇல்லை. ஒவ்வொரு பூதத்துக்கும் சக்தி உண்டென்பதைத் தற்கால விஞ்ஞான ஆராய்ச்சியாளர் கண்டு பிடித்திருக்கின்றனர். ஆகாய சக்தியினால் இக் காலத்தில் எவ்வளவு காரியங்கள் நடைபெறுகின்றன. இவ்வைந்து பூதங்களும் தோன்றின காலத்தை அறிவது அரிது.

ஆகாசம், வாயு, தேயு, நீர், மண் என்ற முறைப்படியே இவை ஒன்றன் பின் ஒன்றாகத் தோன்றின. இவை ஒன்று சேர்ந்ததே உலகம். சிலர் உலகம் இயற்கையென்பர். அன்னார் உலகத்தில் சூடு, குளிர் முதலிய இருவித குணங்களிருப்பதை அறியார். இரண்டுவித வேறுபட்ட குணங்களிருப்பின் அஃது இயற்கை உலகமாகுமா? இதனால் இவ்வுலகம் ஒரு காலத்தில் தோற்றுவிக்கப்பட்டதே. உலகம் உண்டான போதே நாம் உண்டானோம். உலகத்திலுள்ள ஐந்து பூதங்களும் ஒன்றுபட்டிருத்தலால் இதை ஒரு சித்புருஷன் ஆட்டிவைத்தல் வேண்டும்.

இவ்வுலகத்தை ஈசாவாஸ்யம் என்றும் கூறலாம். ஈசனால் படைக்கப் பட்டதே ஈசாவாஸ்யம். அவனே தன்னால் படைக்கப்பட்ட உலகத்தைக் காப்பாற்றுபவன். உயிரற்ற பொருள்களைக் கூட்டிவைக்க ஒருவன் இருப்பதாலேயே அவை ஒன்று சேர்ந்து இயங்குகின்றன.

இவற்றைக் கூட்டுவிப்பவனை நீ எவ்வாறு உணர்வாய் என்ற கேள்வி எழலாம். நமக்குப் பக்கத்திலுள்ள காற்றை நாம் காண்கிறோமா? காணாததால் காற்று இல்லையென்று கூறிவிட முடியுமா? சில சமயங்களில் அக் காற்று உஷ்ணமாய் இருப்பதையும் சில சமயங்களில் அது குளிர்ச்சியாயிருப்பதையும் உணர்கிறோம். அதனால் காற்றென்பதுஉண்டென்றுநிரூபிக்கிறோம். அதுபோலக் காணாததைக் கண்டு கூறுவோரே பெரியோர். இதை வேறோர் உதாரணத்தாலும் விளக்குவாம்.

ஒரு பள்ளிக்கூடத்தில் ஒரு சிறு பையன் சேர்ந்து இரண்டு மாதங்களே ஆயினவென்று வைத்துக்கொள்வோம். வேறொருவன் இரண்டு வருஷங்களாக வாசிக்கிறான். கல்வி உத்தியோகஸ்தர் வரும்போது 'ட' என்ற எழுத்தைக் கரும்பலகையில் எழுதி முன்னவனைக்கேட்டால் அவன் என்ன கூறுவான்? ஒரு கோடு என்பான். பின்னவனோ 'ட' ஒலியைக் குறிப்பதென்பான். இருவருக்கும் வித்தியாசம் என்ன? முன்னவன் கண்டதைக் கண்டவாறே கூறினான். பின்னவனோ கண்டதை மனத்தில் கொண்டு கண்ணுக்குக் காணப்படாத ஒன்றைக் கூறினான். இவ்விருவரில் பின்னவனையே நாம் மெச்சுகிறோம். அப்படியே பெரியோரும்.

உயிரற்ற பொருள்கள் ஒன்று சேர்ந்தபோது மனிதனைக் காட்டிலும் அறிவுடையனவாகின்றன. உதாரணமாகக் கடிகாரத்தை எடுத்துக் கொள்வோம். அஃது உயிரற்ற பொருள். ஆயினும் மனிதன் அறிவுக்கு எட்டாத கால அளவை அது காட்டுகிறது. எனவே, அது மனிதனைக் காட்டிலும் அறிவுள்ளது. அச்சிறப்பு அதற்கு எவ்வாறு வந்தது? அதற்குள் ஒரு சித் புருஷன் இருந்து அதனை ஆட்டிவைப்பதனாலன்றோ?

ஈஸ: என்ற பதத்துக்கே கடவுள் என்பது பொருள். இது காப்பாற்றுபவன் என்பதை உணர்த்துகிறது. காக்க உள்ளவனே கடவுள். அக் கடவுள் இரக்கம் அல்லது அன்புமயமாகவேயிருக்கிறார். இதனாலேயே திருநாவுக்கரசு சுவாமிகள் வேதாரண்யத் தேவாரத்தில்,

"இரக்கமொன்றிலீர்............"

என்றுகடவுளைச்சுட்டுகிறார். தயைஇல்லாவிடில்ஆன்மாக்கள்ஜீவிக்கமாட்டா. அதனால் கடவுளிடம் அன்பு உண்டு இதை நாம் காண்பதில்லை. இதற்கு உதாரணமாக எதைக் கூறுவது? முன்னர்க் கூறிய காற்றையே கூறலாம். இக்காலத்தில் காற்றுக்கு எடை உண்டு என்பது கண்டு பிடிக்கப்பட்ட போதிலும் நாம் அதைக்காணகிறோமா? இல்லையே! கடவுள் சோதனைக்கு அகப்படாதவன். அதனாலேயே பெரியோர் அக்கடவுளைச் 'சோதனைக் ககப்படாச் சோதி! உன்னைச் சோதிக்கத்துணிந்தேன்' என்று கூறினர். உலகத்தைப் பார்க்கப் பார்க்கவே நமக்குக் கடவுள் நினைவு உண்டாகிறது.

பால் தயிராகத் திரிதல்போலப்பஞ்சபூதம் இத்தேசமாகத் திரிந்தது. பஞ்ச பூதப்பரிணாமமே உலகம் என்பர். காரணம் தப்பினால் மரணம் உண்டாவது நிச்சயம். காரணத்தை நாம் இருதயம் (Heart) என்று கொள்ளலாம். பிரிந்துகிடக்கிற பஞ்சபூதங்களையும் கடவுள் அன்பால் ஒன்று சேர்த்துக் காக்கிறார். நாம் அவரிடம் அன்பு பாராட்டவில்லையேல் அவர் நம்மை வெறுப்பார். கடவுளுக்கு எல்லாரிடத்தும் ஒரேவிதமான அன்பு உண்டு.

இக்காலத்தில் சிறிய உதவி செய்தவருக்கும் நாம்வந்தனம் (Thanks) செலுத்துகிறோம். கடவுள் அன்புக்கு நாம் கைம்மாறு காட்டுகிறோமா? ஈசன் நமக்கு இவ்வளவு பெரிய உலகத்தைக் கொடுத்தான். அதை நாம் மறந்து விட்டோம்.

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு."

என்று திருவள்ளுவர் கூறுகிறார். செய்த நன்றியை மறப்பது கொலை செய்தலுக்குச் சமமாகும்.

186960

கடவுளிடத்து நாம் நன்றியை எவ்வாறு காட்டுதல் கூடும். அவனைப் பற்றிய நினைவு சதா நம்மிடம் இருத்தல் வேண்டும். ஆனால் அவனோ நம் எண்ணங்களுக்கு அப்பாற்பட்டவன். அதனாலேயே மணிவாசகனார் கடவுளை, "மாற்ற மனங்கழிய நின்ற மறையோனே" என்றார். தைத்திரியோப நிஷத்தும் வாக்கு மனம் கடந்ததே கடவுள் என்று கூறுகிறது.

அப்படிப்பட்ட கடவுளைக் காணுதல் எவ்வாறு? உருகிய உள்ளத்துக்கு அவன் வெளிப்படுவான். 'உள்ளம் உருகின் உடனாவன்' என்பது திருவுந்தியார்.

'ஒன்றென் றிரு தெய்வம் உண்டென் றிரு'—பட்டினத்தார்.

'அழுதால் உன்னைப் பெறலாமே.........'—மணிவாசகனார்.

அவனைத் தவிர நம்மைக் காப்பார் ஒருவர் இல்லை. அதனால் அவ னொருவனே நமக்குக் கதி.

இதுவரை கடவுளைப் பற்றியும், அக்கடவுளைப் பற்றிய நினைவே சதா நம்மிடம் ஏன் இருத்தல் வேண்டுமென்பது பற்றியும் பேசினோம். இனி நந்தி தேவரைப் பற்றிச் சிறிது பார்ப்போம்.

நந்தி என்ற பதத்துக்கே சந்தோஷமாயிருப்பவன் என்பது பொருள். பிறரைச் சந்தோஷப்படுத்துபவனும் அவனே. நந்தியோடு 'ஆ' சேர்த்தால் ஆநந்தி என்றாகிறது. ஆனந்த மயமே நந்தி. சந்தோஷம் நிலைத்திருப்பதன்று; ஒரு காலத்தில் மறையக் கூடியது. ஆனால் ஆனந்தமோ என்றும் நிலைத்திருப்பது. நந்தி, நம்பன் முதலியன கடவுள் பெயர்கள்.

இனி நந்திக்குடைய வேறுபல பெயர்களைக் கவனிப்போம்.

தேவர் என்பதும் நந்தியின் பெயர். தேவர்க்குரிய சிறப்புக்கள் என்ன? அவர் அதிக வயதுள்ளவர்; அமுதம் சாப்பிட்டவர்; பொன்னுலகத்தில் இருப்பவர்; கிழத்தனம் இல்லாதவர்; காளைப் பருவம் உடையவர்; நல்லனவற்றைச் செய்து புகழுடம்பு பெற்றவர்.

"ஆதியிலும் திருநந்தி அனாதியிலும் திருநந்தி
வாதனையால் விளையாட வருமிடமும் திருநந்தி
தீதிலாத் திருநந்தி திகழ்பெருமைத் திசைமுகனார்
ஓதிடினும் அவர்க்குவாய் ஒருகோடி போதாவே"

என்று ஞானக் கூத்தர் நந்திபெருமான் பெருமையைக் கூறியிருக்கிறார்.

ஒருவருக்கு ஆசை உண்டாயின் அன்பு குறையும்; அதனால் அறிவு குறையும். அதனால் பிறவாமலிருக்க ஆசைப்படுங்கள் என்று திருவள்ளுவர் கூறுகிறார்.

'வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது
வேண்டாமை வேண்ட வரும்'—திருக்குறள்.

ஆசைகளைப் பூர்த்திசெய்தவர் திருநந்தி. 'செல்வர்க்கழகு செழுங்கிளை தாங்குதல்.' பிறர்க்கு உபகரிப்பதே செல்வர்க்கு அழகு. நந்தி ஆனந்தச் செல்வர். அவர் நமக்கு உதவி செய்யாமல் இரார். இதனாற்றான்,

"செம்பொரு ளாகமத் திறன் தெரித்து
நம்பவ மறுத்தநம் நந்தி வானவன்"

என்று கூறப்பட்டிருக்கிறது. தெரித்து என்பது என்னைத் தெரியும்படி செய்து என்ற பொருளில் வந்திருக்கிறது.

ஒருவன்படிக்குந்தொறும்படிக்குந்தொறும் அறியாமையேமிகும்என்று திருவள்ளுவர் திருக்குறளில் கூறியிருக்கிறார். அதனால்படிப்பதாலேயேநம் சந்தேகங்கள் தெளிவுறா. நாம்ஒரு குருவைக் கொள்ளுதல்வேண்டும். திருநந்திதேவரே நமக்கேற்ற குரு. குருவுக்கு மேகத்தை ஒப்பிடலாம். சமுத்திரத்திலுள்ளது உப்பு நீர். அது குடிக்க உதவாது; குளிக்க உதவாது. அது போலவே சாத்திரக்குப்பை. சாத்திரக்குப்பை நமக்கு உதவாது. ஆனால் மேகமாகிய குரு என்ன செய்கிறார். மேகம் சமுத்திர நீரை உட்கொண்டு நமக்குச் சுத்த நீரை அளிப்பதுபோலக் குரு சாத்திரக் குப்பைகளின் உட்பொருளைக்கொண்டு நமக்கு உபதேசமாக வழங்குகிறார். அதனால் கடவுள் குருவாக வந்த மூர்த்தமே திருநந்திதேவர்.

"அங்கணன் கைலை காக்கும் அகம்படித் தொழின்மை பூண்டு
நங்குரு மரபுக் கெல்லாம் முதல்குரு நாதன் ஆகி"

என்று திருநந்தி தேவரைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது.

இணைப்பை யறிந்தால் பிரவர்த்தியை விடுகிறோம். ஓடுகின்ற அறிவு பிரவர்த்தியின்பாற்பட்டது. அதைக் கட்டுப்படுத்தலே நிவர்த்தி மார்க்கமாகும். நாம் நிவர்த்தி மார்க்கத்தில் செல்ல எண்ணுகிறோம். இதைக் கற்றுக்கொடுப்பவர் கோயிலிலுள்ள நந்திதேவர். ஆகமம் இதையே கூறுகிறது. ஆகமம் என்பதற்கு வருகிறது என்பது பொருள். மந்திரியாக இருந்த மணிவாசகனார் பரமகுருவின் வரவை நோக்கி அழுதமை பெறுகிறோம்.

இனி நந்திக்குரிய குணங்கள் யாவை என்பதை ஆராய்வோம். அவர்க்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. நந்தியெம்பெருமானுக்கு நந்தியென்பது தீக்ஷாநாமம். நாமம் மட்டும் இருந்து பிரயோசனம் இல்லை. அதனாலேயே அவர்க்கு அதிகாரம் வழங்கப்பட்டது. பெயர் இருந்து அதிகாரம் இல்லாவிட்டால் பிரயோசனம் இல்லாமையைத் திருக்குறள் விளக்குகிறது. சிவபெருமான் நந்திக்கு அதிகாரம் கொடுத்தமையைத் திருவையாற்றுப் புராணம்,

"வருநந்தி மிசைக்கொண்டு வானுலவுந் திரிபுரங்கள்
கருநந்தி விழநகைத்த கண்ணுதலோ னென்றுலகக்
குருநந்தி யையாறன் குலவுமுனி மைந்தனுக்குத்
திருநந்தி தேவனெனத் திருநாமஞ் சாற்றினனே"

என்ற செய்யுளில் கூறுகிறது.

நந்திதேவர்க்குரிய அங்கங்கள் என்ன? இதைத் திருவையாற்றுப் புராணம்,

"மற்றிணையி லாக்கயிலை மலைநாத னந்திக்கு
நெற்றியிற்கண் ணாலுபுய நெருப்புருவம் பிறைகொண்முடி
சற்றுமொரு குறையில்லாச் சாரூபம் பணித்தருளிப்
பெற்றியினு லருட்சுரிகைப் பிரம்புமருள் செய்தனனே"

என்று கூறுகிறது.

நெற்றிக்கண் ஆசையில்லாமையைக் காட்டுகிறது. ஆசையை உண்டாக்கவந்த மன்மதனை எரித்தது நெற்றிக்கண். நான்கு புயங்கள் சாதாரண மனிதரல்லர் என்பதைக் காட்டுகின்றன.

நெருப்பின் நிறம் தனியேயிருக்கும் தன்மையுடையதல்ல. சார்ந்த தன் நிறத்தையே அஃது உடையது. அதனால் நெருப்பின்நிறம் வெண்மை என்னலாம். நந்தியின் வடிவம் வெண்மை. இது நெருப்பைக் குறிக்கிறது. கடவுள் அழல்வடிவினன். அதனால் கடவுளின் அம்சமே திருநந்தி.

நந்தி தேவர்கருச் சந்திரனும் உண்டு. சந்திரன் இரவில் சஞ்சரிப்பவன். அதனால் அவன் தோஷசஞ்சாரி. தோஷத்தில் சஞ்சரித்து நன்மை உண்டாக்குபவன். இதுவே குருவின் நோக்கம்.

நந்திதேவர்க்கு அளித்திருப்பது சாரூப முத்தி. முத்தி மூன்று வகைப்படும்; பழிபடுமுத்தி, பதமுத்தி, பரமுத்தி. முத்தி அல்லாதது பழிபடுமுத்தி. படிப்படியாக வருவது பதமுத்தி. எல்லாவற்றையுங் கடந்தது பரமுத்தி. பரமுத்தியே சாரூபமுத்தி. கடவுளிடமிருந்து எல்லாப் பாக்கியமும் கொண்டவர் சாரூபமுத்தியடைந்தவர். இஃது ஒரு குறைவுமில்லாதது. சிவபெருமான் உருத்திரரெல்லார்க்கும் சாரூப முத்தி யளித்திருந்தபோதிலும் நந்தியெம்பெருமானுக்கு அளித்ததுபோல அதிகாரம் தரவில்லை. அதிகாரம் அடிக்கவும் அணைக்கவும் உபயோகப்படுகிறது.

திருநந்திதேவர்க்குப் பிரம்பும் கொடுக்கப்பட்டிருக்கிறது. எதற்காக? சந்நிதானத்தை மறைப்பவர்களை அடிப்பதற்காக. அடிபட்டவரே ஆண்டவனை நினைப்பர்.

நந்திதேவர் உடைவாளையும் உடையவர். இதுவும் அதிகாரத்துக்கு அறிகுறி.

நந்திதேவரின் வலது கையில் மழுவும் இடதுகையில் மானும்உண்டு. மான் வேதத்தைக் குறிப்பது. பட்டினத்தார் திருவொற்றியூர் ஒருபா ஒருபஃதில்,

"வேதம் மான்மறியே......"

என்று கூறியிருக்கிறார். வேதமாகிய மான்குட்டியைத் தாங்கியிருக்கிறார் என்பது வேதமாகிய பொருளைத் தாங்கியிருக்கிறார் என்று பொருள்படும். வலது கையிலுள்ள மழு வீரத்தைக் காட்டுவது; ஆண்மையை உணர்த்துவது. மழுவை விட்டதாக எந்தச் சரிதமும் கூறவில்லை. மழு சம்ஹரிக்கும் தன்மையுடையது. அதனால் கடவுள் சம்ஹார கர்த்தாவாகிறார். எல்லாவற்றையும் சம்ஹரிப்பவனே உண்டாக்க வல்லவன். இதுவே கடவுள் சக்தி. சம்ஹாரன் என்ற பதத்துக்கு ஒழுங்காக இழுத்துக் கொள்பவன் என்பது பொருள். சம்ஹாரம் ஓய்வு பெறுதல். இது கடவுளின் அன்பின்பாற்பட்டது. எல்லா ஜீவன்களையும் ஒரே காலத்தில் ஓய்வுபடுத்துதலே மகா சம்ஹாரம். இவ்வதிகாரம் திருநந்தி தேவர்க்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. சாட்சியாகப்பிரம்பும்வழங்கப்பட்டிருக்கிறது.

திருநந்திதேவர் ஒரு சித்தனுமாவர். சித்தன் வாழ்வுபற்றித் திருவேரகத்தைப் பற்றிய திருமுருகாற்றுப்படை உரையில் நச்சினார்க்கினியர் கூறியிருக்கிறார். சித்திசெய்யத் தொடங்கியவன் ஞானியாகமாட்டான். நினைவு இல்லாமல் சித்தி கைவரப் பெற்றவரே சித்தர். திருவையாற்றுப் புராணம்,

"யோசனைகள் பன்னிரண்டா யிரமுள்ள திருமலையிற்
பேசரிய சாரூபம் பெற்றகண நாதருக்கும்
பாசமிலாச் சித்தருக்கும் பாரிடங்க ளானவர்க்கு
மாசின்மே லதிகாரம் ஐயனீந் தருள்செய்தான்"

என்ற செய்யுளால் நந்தியெம்பெருமானுக்கு அதிகாரம்கொடுக்கப்பட்டமை கூறப்பட்டிருக்கிறது.

இவ்வளவு அதிகாரத்தோடு கூடிய நந்திக்கு ஆலயத்தின் காவல் தரப்பட்டிருக்கிறது. இதை மேற்படி புராணம்,

"எழுமதில் புடைசூழ்ந்த விருநான்கு வாயிலுக்கும்
வாழியதன் றனைப்பணிய வருமடியார் யாவரையும்
சூழவரு காலங்க ளறிந்துவிடுந் தொல்பணிக்கு
மாழிசூழ் புவித்தன் ஆலயத்தினுங் காவல் கொடுத்தான்"

என்று கூறுகிறது.

இக்காவலின் திறத்தை மன்மதன் சரித்திரம் விளக்குகிறது. மன்மதன் சிவபெருமான்மீது பாணத்தை விடத்துணிந்தான். நந்தி 'உம்' எனவே அவன் பெருமூச்சு விட்டான். நந்தியின் காப்பைக் கண்டதும் அவன் பயம் கொண்டான்.

பெரிய புராணம்,

"நெற்றியிற் கண்ணர் நாற்பெருந் தோளர்
நீறணி மேனியர் அனேகர்
பெற்றமேல் கொண்ட தம்பிரான் அடியார்
பிஞ்ஞகன் தன்னருள் பெறுவார்
மற்றவர்க் கெல்லாம் தலைமையாம் பணியும்
மலர்க்கையில் சுரிகையும் பிரம்பும்
கற்றைவார் சடையான் அருளினால் பெற்றான்
காப்பதக் கயிலைமால் வரைதான்."

என்பதால் நந்தி கோயில் காவல் பூண்டமை விளங்குகிறது.

ருக் என்றால் துக்கம் என்று பொருள். ரன் ஓட்டுகிறவன். அதனால் ருத்ரன் துன்பத்தை ஓட்டுபவன் "இடும்பை நோய் ஓட்டும் உருத்திரன்" என்று சிவஞான முனிவர் கூறுகிறார். இப்பெயரும் திருநந்திதேவர்க்குப் பொருத்தமாகும். எப்படி? ஒரு காலத்தில் தேவர்களெல்லாரும் ஒன்று சேர்ந்து சிவபெருமானிடம் சூரபன்மனைப் பற்றி முறையிடச் சென்றனர். பிரமாவே முதல் சென்றார். அவர் நந்தியை நோக்கி,

"நந்தியெம் போதுகேள் நங்கள்பால் துன்பெலாம்
சிந்தை செய்திடுதி"

என்று கூறினர். இக்கூற்றைக் கண்டு நந்திதேவர் பரிதாபப்பட்டார். துன்பப்படுபவரைக் கண்டு பரிதாபப்படல் சான்றோர் இயல்பு.

உடனே நந்திதேவர் உள்சென்று பரமனுடைய ஆக்ஞையைப் பெற்றுத் தேவர்களை உள்ளே அழைத்துச் சென்றார். இதனாலேயே நந்தி தேவர்க்குத் தூயவன் என்ற பெயரும் உண்டாயிற்று. நந்திக்குச் சைலாதி பதி என்ற ஒரு பெயரும் உண்டு. அவர்க்குத் தண்டித்தற் பணியும் வழங்கப்பட்டிருக்கிறது.

ஒரு சமயம் பிரமா செய்த யாகம் ஒன்றுக்கு நந்திதேவர் அனுப்பப் பட்டார். ஆங்குத் தக்கன் சிவபெருமானை இழித்துக் கூறினான். நந்தியம் பெருமான் இருகாதுகளையும் பொத்திக்கொண்டு 'சிவ, சிவ' என்றார். இதுவே மந்திரம் சொல்லவேண்டியமுறை. நம்முடைய காதுக்குங் கேளாதபடி நாம் மந்திரத்தைச் சொல்லுதல் வேண்டும். உடனே தக்கன் தலைபோகவென்றும், அவ்விடத்தில் ஆட்டுத்தலை உண்டாவதாகவென்றும் நந்திதேவர் சாபம் போட்டார். ஆட்டுத்தலை மற்றொருதரம் தூஷியாது என்பதனால் அவ்வாறு சபித்தார் போலும்.

காசியில் விஸ்வநாதருக்குத் துரோகம் செய்ய எண்ணிய வியாஸரைத் தண்டித்தவரும் திருநந்திதேவரே.

'எனைத்தானும் நல்லவைகேட்க அனைத்தானும் ஆன்ற பெருமை தரும்' என்ற திருக்குறள்படி உபதேச அளவே நமது குணமும் இருக்கும். அவ்வளவே பெருமையும்.

சனற்குமாரர் பிரமதேவருடைய புத்திரர்; முருகப்பெருமானுடைய சிஷ்யர்; என்றும் இளமையுடையவர்.

பரமேஸ்வரரிடத்து உபதேசம் பெற்றவர் அனந்ததேவர். அவர் ஸ்ரீ கண்டருக்கு உபதேசித்தார். அவர் நந்திதேவர்க்கும், நந்திதேவர் சனத்குமாரர்க்கும், சனத்குமாரர் சத்திய ஞானதரிசனிக்கும், அவர் மெய் கண்டாருக்கும் உபதேசித்தனர். இது பரம்பரையாக வந்த உபதேசம். உபதேசம் இருவகைப்படும்; ஒன்று நூல்வகையாகவருவது; மற்றொன்று பரம்பரை வழியாக வருவது.

"எந்தைசனற் குமரன் எத்த இயல்பாய் நந்தி உரைத்தருளும் ஞான நூல்" என்றார் பெரியாரும். ஆசாரியமுறையில் நமக்கு அனுக்கிரகம் பண்ணுகிறவர் திருநந்திதேவரே.

(சித்தாந்தம்)

உ

தமிழரின் சைவம்.

(சைவத்திருவாளர், ஆ. ஈசுரமூர்த்திப் பிள்ளையவர்கள்.)

தமிழில் 'சந்திரகாந்தா' என்றொரு கதையுண்டு. புராணமோ சரித்திரமோ சம்பந்தியாக ஒரு கற்பனை அது. சந்நியாசிகளிலும் அயோக்கியர்களிருக்கிறார்களென்பதை அதொருபகுதியில் விளக்குகிறது. அம்மட்டில் அது நின்றாற் கஷ்டமில்லை. அதற்காக அக் கதை தன் சந்நியாசியை எந்தத்தனிப்பட்ட சமயத்திலுஞ் சேராதவொரு பொதுவேடமுடையவனாகவே காட்டியிருக்கவேண்டும். பொதுவேடமுடைய சந்நியாசிகள் இப்போது மில்லாமலில்லை. ஆனால் விபூதிருத்ராக்ஷமாகிய சிவசின்னதாரணமுடைய சைவனை அவ்வயோக்கிய சந்நியாசியை அக்கதை காட்டியுள்ளது. ஸினிமாவிலும் அவன் அப்படியே தோன்றுகிறான். அதனால் அக்கம் பெனிக்கும் சந்நியாசி நிந்தையுடன் சைவ சமய நிந்தையுஞ் செய்ய வேண்டுமென்ற எண்ணமிருப்பதாக யாருங்காணலாம். பரத கண்டத்திலுள்ள சைவ சமயிகளெல்லாஞ் செத்தோ ஆண்மையிழந்தோ வொழிந்த பின்னரே அக்கதை இப்போதிருக்கும் விதத்தில் நடிக்கப்படத்தக்கது. அந்நிலைக்குப் பாதகண்டம் இன்னும் வரவில்லை. சரித்திர வுண்மையாயிருந்தும் ஸ்ரீமத் அப்பர் சுவாமிகளின் சரிதையை ஸினிமாவிற் காட்டக்கூடாதென்று தடை செய்யமுயலுஞ் சமணர்பாலுள்ளமானம் ரோஷம் முதலியவற்றில் ஆயிரத்திலொரு கூறுவது சைவர்பாலிருக்குமானால் அவரெப்படி அக்கற்பனைக் கதையை ஸினிமாவில் வரவிடுவர்? சிலசைவருக்குச் சைவமடாதிபதிகள் மேற்பனையுண்டு. அதற்குக்காரணம் அச்சைவர் மேற்றோ? அம்மடாதிபதிகள் மேற்றோ? இருபாலார் மேற்றே யுமோ? அஃதொருதனிவிஷயம். அதற்காக அக்கதையைஸினிமாவில் வரவிடுதல் எந்தச் சைவருக்குத் தகும்? சாமானிய சைவர் மனம் அக்கதைப் பகுதியால் எவ்வளவு திரிவடையுமென்பதை அம்மட விரோதிகள் சிந்திக்கவேண்டாமா? அது போகட்டும். ஸ்ரீ ஞான சம்பந்த பரமாசாரிய மூர்த்திகளின் இரண்டொரு தேவாரப் பாசுரங்கள் கிராமபோனில் எடுக்கப்பட்டன. அவற்றை அநேகர் பாடவைத்துக் கேட்டு மகிழ்ந்தார். அப்பாற் சைனக் கிளர்ச்சியால் அப்பிளேட்டுக்கள் பறிமுதலாயின. 'திருமுறைகளிலிருந்தே அன்ன பாட்டுக்கள் எதிர் காலத்தில் நீக்கப்படும். பேதைச் சைவரே! எம்திறத்தைக் காண்மின்' என்று அச்சைனக்கூட்டம் மார்தட்டுவது போலில்லையா அது? 'யானைவரும் பின்னே; மணியோசை வரும் முன்னே.' அது போகட்டும். ஸ்ரீமத் அப்பர்

சுவாமிகளின் சரித்திரத்தை ஸினிமாவில் நடித்துக்காட்டக் கூடாதென்ற சைனக்கிளர்ச்சி நாளிதுவரைப் பலித்துக்கொண்டுதானிருக்கிறது. அக்கிளர்ச்சியைக் கண்டு பயந்து நடுங்கிய சிலசைவர் அச்சினிமாக்காரருக்கு அப்பெருமானைப் பற்றித் தப்புக்கதையொன்று எழுதிக்கொடுத்திருக்கின்றனராம். சைனருக்கே அது நகையை விளைவிக்கின்றது. அது போகட்டும். ஒரு சுயமரியாதைக்காரர் 'அப்பரும் சம்பந்தரும்' என்றொரு சுவடியையெழுதி வெளியிட்டுள்ளார். அதில் அவ்விருஆசாரிய சுவாமிகளும் மரியாதை கெடப் பேசப்பட்டிருக்கின்றார்கள். ஏனென்று கேட்கவல்ல சைவர் எங்கிருக்கின்றனரோ? இப்படிப் பல வுள. அவை எழுத எழுத விரியும். தமிழ் நாட்டிலேயே சைவம் இங்ஙன மெல்லாம் நிந்திக்கப்படுகிறது. சைவர் அவமானப்படுத்தப்படுகின்றனர். அவருக்கு ரோஷமில்லை. மானமில்லை. பௌருஷமில்லை. "அவர் முகரோமம் முளைத்ததா? ஒட்டவைக்கப்பட்டதா?" என்ற சந்தேகம் நாளுக்கு நாள் வலுத்துக்கொண்டே வருகிறது. சைனருக்கு மானமிருக்கிறது. அது அவரது சைன மதம். அவர் அம்மானத்தை எப்பாடுபட்டாயினுங் காத்துக்கொள்கின்றனர். தமிழச் சைவருள் அநேகர்பால் ஆளுக்கொரு சைவங் காணப்படுகிறது. உருவான சைவங் காணப்படவில்லை. தம்மிடமில்லாத தொன்றை அவர் காத்துக்கொள்வதெப்படி? ஆகையாற் போலும் சைவசமய நிந்தை அவருள்ளத்தைப் பிளக்க மறுக்கின்றது. இப்படித் தமிழச்சைவர் தமிழ் நாட்டிலேயே சைவத்தைப் பிறர் கைவைக்க விடுகின்றனர்.

இராம கிருஷ்ண பரமஹம்ஸர் அசைவரே.

ஒரு சைவப் பத்திரிகை 'இராமகிருஷ்ண பரமஹம்ஸரை 63 நாயன்மார்கள்......முதலிய சைவப்பெரியோர்களோ டொப்பவே ஒரு பெரியாராகக் கொள்ளுதல்வேண்டும்' என்று கூறுகின்றது. அவ்வாறு கோடற்குப் பிரமாணம் 'அப்பாலும் அடிசார்ந்த அடியார்க்கும் அடியேன்' என்பதாம். அப்பாலுமென்பதற்குத் தமிழ்நாடல்லாத பிறநாடென்பதே பொருள். சைவசமயமல்லாத பிறசமயமென்பது பொருளன்று. இராமகிருஷ்ணர் வேறு பல வகைகளிற் பெரியராயிருக்கலாம். ஆனால் அவர் சைவசமயியல்லரென்பது நிச்சயம். அவர் ஒரு சாக்தேயி; மாயாவாதப்போக்கினர்; அதீக்ஷிதர்; திரிபதார்த்தங்களின் நித்தியத்தைச் சம்மதியாதவர்; சிவநாமத்தை மறந்துஞ் சொல்லியறியார்; விபூதி ருத்திராக்கதாரண முனியர். இன்னும் பல அசைவலக்ஷணமுடையார். அவரை நாயன்மாருடன் சேரவைத்துப் போற்றவேண்டுமென்று யோசனை கூறுவது அப்பத்திரிகையின் எடுப்புக்கு அடுப்பதன்று. நாயன்மார் கூட்டத்தில் இராமகிருஷ்ணரைச் சேர்க்கவிரும்பும் அப்பத்திரிகை

ஏசு, முகம்மது, ராமமோஹனர், தயானந்தர், விவேகானந்தர், பெஸண்டு, காந்தி முதலியோரையும் சேர்க்கவிரும்பவேண்டும். இராமகிருஷ்ணரிடம் போன்று இவர்களிடமும் அன்புள்ளமில்லையா? இவர்களையும் அப்பாலு மடிச்சார்ந்தாரென்று ஏன் சொல்லப்படாது? இவர்களுள் ஒருவரை அங்கீகரித்து ஏனையரைத் தள்ளுவது நியாயமாகாது. ஆகவே அப்பத்திரிகை அவ்வெல்லார்களையுமே அக்கூட்டத்திற் சேர்த்து வணங்கி வாழ்த்தி வாழ்க. ஆனால் இராமகிருஷ்ணர் முதல் அவ்வெல்லார்களையும் நாயன்மார் கூட்டத்திற் சேர்த்துப் போற்றக்கூடிய ஒருசைவம் உலகிலுண்டாவென்பதுதான் வினா? இல்லையென்பதே அதற்கு விடை. சநாதனமான வைதிகசைவத்தில் அத்தகைய அசைவர்களைச் சைவாசிரியன்மாரோடு சேர்த்துப் போற்றச் சிறிதும் இடங்கிடையாது.

அப்பத்திரிகை 'பாண்டி நாட்டிலே.........திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகள்.....வேதநெறி தழைத்தோங்கவும், மிகுசைவத் துறை விளங்கவும் எப்படிச் செய்தனரோ, அதுபோன்று இராமகிருஷ்ண அடிகளும்......இந்திய தேசத்(தில்)......வைதிக சமரச சைவஞான தீபத்தை ஏற்றி வைத்தனர்' என்கின்றது. சைவத்தைப் பாண்டியாகிய மிகச் சிறு நாட்டிற் பரப்பினார் சம்பந்தர்; இந்தியாவாகிய மிகப் பெருநாடெங்குமே பரப்பினார் இராமகிருஷ்ணர்; ஆதலின் சம்பந்தரினும் இராமகிருஷ்ணர் எத்தனையோமடங்கு பெரியாரென்பதே அப்பத்திரிகையின் கருத்தாதல் அவ்வாக்கியத்தாற் புலனாகும். இராமகிருஷ்ணர் பரப்பியதுஞ் சைவமேயாகட்டும். அதைச் சம்பந்தப்பெருமானார் பாண்டிநாடு மட்டிற் பரப்பினரென்பதுபோன்று அக்கிருஷ்ணர் வங்கநாடு மட்டிற்றானே பரப்பினரென்று அப்பத்திரிகை சொல்லவேண்டும்! ஆனால் அது அவரை இந்தியாவெங்குஞ் சைவம் பரப்பினவரென்று கூறிக்களிக்கின்றது. சம்பந்தப் பெருந்தகையாரின் சிவபணி தமிழ்நாடு முழுவதுமேயாக அதை அப்பத்திரிகை பாண்டிநாட்டளவிற்கொண்டுபோய்ச் சுருக்கிவிடுகிறது. அப்பத்திரிகையின் சைவப் பிரசார லாவண்யம் என்னே!

அப்பத்திரிகை 'இராமகிருஷ்ணர் போதித்த சமய நெறிக்கும் நமது சமயாசாரியர்கள் பரப்பிய சைவ சமயத்திற்கும் ஒருவித பேதமும் இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை' என்கிறது. வேறெச்சமயத்திலு மில்லாதனவும் சைவத்தில் மாத்திரம் உள்ளனவுமான சிறப்புக்கொள்கைகளில் இரண்டொன்றையாவது இராமகிருஷ்ணர் போற்றி யொழுகியிருக்கவேண்டும். அவை எவை? இவையென அப்பத்திரிகை எடுத்தியம்பினலொழிய அதன் கூற்றுப் பயன்படாது. சைவத்திலிருப்பதாகச் சொல்லப்படும் அன்புநெறி

சைவத்தின் சிறப்பியல்பன்று. அது எல்லாச் சமயங்களிலும் உள்ளதே. எல்லாச் சமயங்களுக்கும் பொதுவான வியல்புகளை யெடுத்து ஒரு சமயத்துக்கே யுரிய சிறப்பியல்புகளெனப் பேசுவது அச்சமயங்களை ஏமாற்றுவதேயாகும். அவ்வச்சமயத்தின் சிறப்பியல்புகளின் தொகுதியே அவ்வச்சமயமா மெனக.

அப்பத்திரிகை 'சைவர்களிற் சிலர் தொன்று தொட்டு நம் முன்னோர்களால் சைவ சமயாசாரியர்களாகக் கொள்ளப்பட்ட நால்வர்களையும் அவர்கள் அருளிச்செய்த அருள் நூல்களாகிய தேவார திருவாசகத்தையும் போற்றுதல்செய்யாமல் புறக்கணித்துப் புதிதாக மற்றநாட்டில் அவதரித்த இராமகிருஷ்ணர் போன்ற அடியார்களை ஆசாரியராகக்கொண்டு அவர்களையே போற்றத் தலைப்பட்டு விடுகிறார்கள். சைவர்களெல்லோரும் நால்வர்களை சமயாசாரியராகக்கொண்டு, இராமகிருஷ்ணர் போன்ற பெரியார்களை அப்பாலும் அடிசார்ந்த அடியார் கூட்டத்திற் சேர்த்து வழிபடல் நன்று' என்கிறது. அப்பத்திரிகைக்கு அசைவராகிய இராமகிருஷ்ணர் சைவராகிய நாயன்மார் கூட்டத்திற்சேரத்தகுந்தவரானார். அங்ஙனமாக இந்தியாவெங்குமே சைவதீபம் ஏற்றினவராகப் போற்றப்படும் அக்கிருஷ்ணர் பாண்டி மட்டிற் சைவம் பரப்பியவராகக் கழிக்கப்படுஞ் சமயாசாரியர் குழுவில் அக்கிரஸ்தானமும் வகிக்கலாமே. ஐயோ! கலியே! வைதிக சைவ வரம்பு இப்படியும் அழியவருமா!

'பரமஹம்ஸ:......பஸ்மோத்தூளிதபர:' என்றது நாரத பரிவ்ராஜகோப நிஷத்து. பரமஹம்ஸ சந்நியாசி பஸ்மோத்தூளித பரனாயிருக்கவேண்டு மென்பது அதன் கருத்து. வேதத்தில் பரமஹம்ஸ சந்நியாசிகளாக அங்கீகரிக்கப்பட்டவர் சம்வர்த்த காருணி, சுவேதகேது, தூர்வாஸர், ரிபு, நிதாகர், ஜடபரதர், தத்தாத்ரேயர், ரைவதகர், புசுண்டர், யாக்ஞவற்கியர் என்பவரே. அவரெல்லாம் விபூதி தாரணிகளாகவேயிருந்தனர். 'பரமஹம்ஸா நாமஸம்வர்த்த காருணிச் வேதகேது தூர்வாஸ ரிபுநிதாக ஜடபரத தாத்ரேய ரைவதக புஸுண்ட ப்ரப்ருதயோ விபூதிதாரண தேவ முக்தா: ஸ்யு: ஸஏவ பஸ்ம ஜ்யோதிரிதிவை யாஜ்ஞவல்கய:' என்ற ப்ருஹஜ்ஜாபாலோபநிஷத்துக் காண்க. சாண்டில்யோப நிஷத்தும் 'தத்தாத்ரேயம்....பஸ்மோதூளித ஸர்வாங்கம்' என்று கூறித் தத்தாத்ரேயரின் சரீரமெங்கும் விபூதியைப்பூசி மகிழ்ந்தது. இராமகிருஷ்ணரிடமோ விபூதிதாரணம் இம்மியுங் கிடையாது. ஆகையால் அவரிடமுள்ளதென வுரைக்கப்படும் பரமஹம்ஸ சந்நியாசம் வேதபடித மல்லாததென்பதை வைதிக சைவோத்தமர் அறிந்து அவரை யொதுக்கி யுய்வாராக.

உ

சாதிமுறைகெட்ட சைவம்.

"கொற்றன் ஒரு வேசிமகன். சாத்தன் ஒரு பத்தினி மகன். கொற்றனுக்கும் சாத்தனுக்கும் சமயம் ஒன்றே. அது சைவம். சைவம் அவ்விருவருக்குஞ் சமயமாய் முடிவதால் அவ்விருவர் பிறப்பும் நிகரே. கொற்றன் தன்பிறப்புக்கு வெள்கவேண்டாம். சாத்தன் தன்பிறப்புக்கு மகிழவேண்டாம். சைவத்தில் வேசித்தனத் தாக்குச் சிறுமையும் பத்தினித்தனத் துக்குப் பெருமையும் இல்லை. வேசி வயிற்றுப்பிறப்பும் பத்தினி வயிற்றுப் பிறப்பும் ஒன்றே. சமரசம் அதுதான். அதுவே மக்கட்கு வேண்டுவதும். வேறெச்சமயத்திலும் அச்சமரசம் சூனியம். சைவமொன்றிலேயே அச்சமரசம் விசேடம். 'சாதிகுலம் பிறப்பென்னுங் கடஞ்சுழி' என்றது மணிவாசகமும். சாதிபேதமில்லை. குலபேதமில்லை. பிறப்புப்பேதமில்லை. அவை பற்றிய உயர்வுதாழ்வுகளெல்லாம் பொய். ஒருசாதி இன்னொருசாதியைக் கலக்கலாம். ஒருகுலம் இன்னொருகுலத்திற்சேரலாம். ஒருபிறப்பு இன்னொருபிறப்போடணையலாம். இவையே அந்தப் பிரமாணப் பொருள்கள். என்னே! சைவத்தின் பரந்தநோக்கம்!" என்கின்றது ஒரு மிலேச்ச சைவம். அதுநேற்று முளைத்தது; வியாபகமற்றது; கௌரவஸ்தலங்களிலகப்படாதது; எப்படியேனு மொழிக. அம்மணிவாசகப் பொருளதுதானோ வென்பதே இங்குக் கவனிக்கவேண்டுவது. ஏ! மிலேச்ச சைவமே! நீ தேவாரம் படித்திருக்கிறாயா? 'தந்தையார் தாயாருடன்பிறந்தார் தாரமார் புத்திரரார் தாந்தாமாரே—வந்தவாறெங்ஙனே போமாறேதோ மாயமா மிதற்கேது மகிழவேண்டாம்' என்பது அதிலுள்ளதன்றோ? அம் மணிவாசகமும் அத்தேவாரமும் ஒரேதரமான பிரமாணங்கள் தானே? அவற்றின் பொருள்கோள்முறை வெவ்வேறுதலில்லையன்றோ? அத் தேவாரத்துக்குப் பொருளென்னை? சொல். பார்க்கலாம். 'தந்தை தாய் முதலிய முறைகளெல்லாம் பொய். சைவத்தில் அம்முறை வேறுபாடுகள் கிடையா. ஆகையால் மகளைத் தந்தைசேரலாம். மகனைத் தாய்கலக்கலாம். அப்படியே முறைகெட்டு யாரையும் யாரும் அணையலாம். என்றுதானே நீ அருத்தம் பண்ணித் தொலைக்கவேண்டும். மணிவாசகத்தைப் பிரமாணங்காட்டிச் சாதிமாறிச் சரிக்கத் தலைப்பட்டாய். தேவாரத்தைப் பிரமாணங்காட்டி முறை மாறிச் சரிப்பதில் மாத்திரம் வெட்கமென்ன வந்துவிட்டது? சாதிகெட்ட நீ முறையுங்கெட்டாய். நீ எப்படியேனுங் கெட்டொழி. சத்பிரமாணங்களைத் துஷ்பிரயோகஞ் செய்கிறாய். அஞ்சிநட.

அத் தேவாரமும் மணிவாசகமும் வைதிகசைவ சுருதிகள். சநாதன தர்மமே அவற்றில் விளக்கம். அத்தேவாரத்தின் மெய்ப்பொருள் 'தந்தை

தாய் முதலிய முறைகள் உள்பொருள்களே. அவைகளை மதித்தே ஒழுக வேண்டும். அதனாற் பலநலன்கள் பலனாகவரும். ஆனால் அந்த நலன்கள் சாசுவிதமல்ல. சிவபிரானை அடைவதால் வரும் நலன்களே சாசுவிதம். சிவபிரானை அடையும்வகையில் அம்முறைப்பற்றுச் சிலசமயங்களிற் குறுக்கிடலாம். அப்போது அவற்றைப் பந்தமென விடவேண்டும்' என்பதே. அப்பற்றை விடுவென்பதால் முறைமாறிச்சரியென்பது தாற்பரியமாகாது. அப்படியே அம்மணிவாசகத்தின் பொருளுமாம். அது 'சாதி குலம்பிறப்புக்கள் உள்பொருள்களே. அவைகளை மதித்தே ஒழுகவேண்டும். அதனாற் பல நலன்கள் பலனாகவரும். ஆனால் அந்த நலன்கள் சாசுவிதமல்ல. சிவபிரானை அடைவதால் வரும் நலன்களே சாசுவிதம். சிவபிரானை அடையும் வகையில் அச் சாதிகுலம் பிறப்புப்பற்றுச் சிலசமயங்களிற் குறுக்கிடலாம். அப்போது அவற்றைப் பந்தமென விடவேண்டும்' என்பதே. அப்பற்றை விடுவென்பதாற் சாதிமாறிச் சரி, குலம்மாறிச் சரி, பிறப்புமாறிச்சரி யென்பன தாற்பரியமாகா. சைவத்தை யடைவது ஒன்று. சிவத்தை யடைவது மற்றொன்று. சைவத்தை யடைவதேசிவத்தை யடைவதுமாகாது. சைவம் சமயம். சிவம் தெய்வம். சிவத்திற் சாதிமுதலியன இல்லை. சைவத்திற் சாதிமுதலியன வெல்லாமுண்டு. அதில் அவை சமயசம்ஸ்காரங்களாலுந் தீரா. 'சைவத்தில் தீக்கை முதன்மை யாகலின் வருணம் ஆச்சிரமம் பற்றித் தாரதம்மியங் கூறுதல் பொருந்தாதெனின்,—தீக்கைப்பின் விதிக்கப்படும் ஆசாரங்களெல்லாம் வருணமும் ஆச்சிரமும் பற்றியே தாரதம்மியம் ஓதுதலானுஞ் சிவதீக்கை ஆன்மாவுக்கேயன்றி வைதிகச்சடங்குபோல உடம்பு முதலிய வற்றிற்கு அன்றெனச் சித்தாந்த சாராவலி முதலியவற்றிற் கூறுதலின், அத்தீக்கையால் ஆன்மாவின் கண்ணதாகிய பசுத்துவம் நீங்கியதன்றி உடம்பின் கண்ணதாகிய சாதி நீங்காமையானும், சாதியுந் தீக்கையாற் கழியுமாயின் ஆதிசைவம் மகாசைவம் அநுசைவம் அவாந்தர சைவம் என்னும் பகுப்பு ஏலாமையானும், மகா சைவர்க்கு விதித்த ஆசாரம் அவாந்தர சைவராற் செய்தல் கூடாமையானும், வேதியர் நான்கு வருணத்தார்க்குங் குரவராவார், அரசர் மூன்று வருணத்தார்க்குங் குரவராவார், வணிகர் இரண்டு வருணத்தார்க்குங் குரவராவார், சூத்திரர் சூத்திரர்க்கே குரவர் என விதந்தோதுதலானும், பிராமணர் முதலிய மூன்று வருணத்தின் நான்காச்சிரமத் துள்ளோருங் குரவராவார், சூத்திரரின் நைட்டிகரே குரவராவார், பிரணவமுதலிய மந்திரங்கட்குந் தாபனமுதலியவற்றிற்கும் உரியராவார், சூத்திரரின் இல்வாழ்வார்க்கு நித்தியமாத்திரத்தினன்றி நைமித்திக முதலியவற்றின் அதிகாரம் இல்லை யென்றும், நித்தியத்தினும் மந்திரங்கள் பிரணவம் ஒழியவே கொள்ளப்படுமென்றும், அவர் அபிடேகத்திற்கே உரியரல்லர் மற்றுத்தாபன முதலியவற்றிற் கூறவேண்

டுவதென்னை யென்றும் ஆகமங்களுக்கெல்லாந் தலையான காமிகத்துள்ளே விதந்தெடுத்து ஓதுதலானும், இதனானும் ஆச்சிரமங்கட்குத் தாரதம்மியந் தானே விளங்குதலானும், பௌதிகர்க்கு உலகதருமிணியும் நைட்டிகர்க்குச் சிவதருமிணியுமென ஆச்சிரமங்கட்குத்தீக்கையினுந் தாரதம்மியம் உண்மையானும், சிவதருமிணி இல்வாழ்வார்க்கும் ஆமென்றற்கு மூலவசனம் இன்மையானும், ஆகாதெனவே சிவாகமங்கடோறும் விலக்குதலானும், நைட்டிகன் நைட்டிகனுக்கும் பௌதிகனுக்குந் தீக்கை செய்க, பௌதிகன் பௌதிகனுக்கே தீக்கை செய்க என விதித்தலானும், வருணத்தினும் ஆச்சிரமத்தினுந் தாரதம்மியம் உண்மை தெற்றென உணரப்படுமாகலின், அதனை இல்லையென்றலும் வேதவழக்கோடுஞ் சிவாகம வழக்கோடும் மாறுகொள்வார் கூற்றேயாமென மறுக்க' என்றது சிவஞானபாஷ்யம். ஸ்ரீமந் மாணிக்கவாசகசுவாமிகள் முதலாயினோர் 'சாதி குலம்', 'தந்தையார்' என்ற பிரமாணங்களை யருளிய காலத்திலும் சிவத்தை யடைந்துவிளங்கினார்கள். எம்போலிகள் சைவத்தைத் தானுஞ் சரியாக அடையவில்லை. வைதிக சைவசுருதிகளெல்லாவற்றின் உள்ளுறைபாகவுமே சிவஞான மகாபாஷ்யம் திகழ்கின்றது. ஆகலின் அந்த இரண்டு திருமுறைப் பிரமாணங்களும் வேறுபொருள்படா. வைதிகசைவம் அப்பாஷ்யத்தை யனுசரித்து அச் சுருதிகளுக்குச் சத்தியார்த்தங் கண்டு தன்மாட்டுத் தொன்று தொட்டுள்ள சாதிமுறைகளைப் போற்றியே ஒழுகும்.

ஆங்கிலம் படித்த சைவர்.

சைவம் இமசேதுபரியந்தம் வியாபகம். ஆனால் ஆங்கிலம் படித்த இக்காலத்துச் சில தமிழச்சைவர் அதைத் தமிழ்நாட்டுக்கே சொந்தமென்று சொல்லி உள்ளங்கையளவிற் சுருக்கிவிடப் பார்க்கிறார். அவரே 'உலகெங்குந் தெரிந்தமொழி ஆங்கிலம். தமிழிலுள்ள சைவநூற்களை அதிற் பெருவாரியாகப் பெயர்க்கவேண்டும். சைவம் உலகெங்கும் பரவ வழி அதுவே' யென்பர். சைவம் அவர் பிரயாசையின்றியே பரதகண்டமெங்கு மாயினும் பரவிக்கிடப்பதற்கு வடமொழிச் சைவநூற்களே காரணம். அவற்றைப் போற்றல் அந்த அளவிலாவது சைவாபிவிருத்தியாகும். அக்கௌசலபுத்தி அவர்பால் வரவில்லை. வந்திருந்தால் அவர் சைவநூற்களை ஆங்கிலத்திற் பெயர்க்கவேண்டுமென்று மாத்திரஞ் சொல்லியிருப்பர். தமிழ்ச் சைவநூற்களை அது செய்யவேண்டுமென்று அவர்சொல்லமாட்டார். இருமொழிச்சைவநூற்களுந் தம்முள் மாறுபடாதனவே. ஆனால் அவருக்கு வடமொழியறிவு சர்வசூனியம். அம்மொழிப்பகையும் அதிகரித்துக்கொண்டே போகிறது. தமிழிலும் பாஷாஞானத்துக்கே அவர் ஆசைப்படுகின்றனர். அதனின் வேறாகச்சமயஞான மென்பதொன்றில்லை யென்பது அவர் கருத்து. ஆகவே தமிழிலும் அவருக்குச் சைவஞானம் கோழிமுட்டைதான். ஆங்கிலம் அவருக்கு வரலாம். சம்ஸ்கிருத பாஷையில் வைத்த

விரோத புத்தியாலும் தமிழ்மொழியில் வைத்த விபரீதாபிமானத்தாலும் அவ்விரு சொற்களிலுமுள்ள சைவ நூற்கள் அவருக்கு வராமற் போகவே அவர் தம் ஆங்கிலப்பயிற்சி கொண்டு உலகிற் பரப்புவது எதனை? நபும்ஸகன் குடும்பாபிவிருத்தி செய்யவல்லனாயின் அவருஞ் சைவாபிவிருத்தி செய்ய வல்லரே. அவருள் யார் யார் எந்த எந்தச் சைவ நூற்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார்? யார் யார் ஆங்கிலப் பத்திரிகை வைத்து நடத்தி அதிற் சைவக் கட்டுரைகளை வெளியிட்டு வருகின்றார்? 'ஹிந்து' முதலிய பிற பத்திரிகைகளிலாவது அவற்றை வெளியிடலாமே. சங்கர ராமாநுஜ மத்துவ சித்தாந்தங்கள் ஏராளமாய் அவற்றில் வெளிவருகின்றனவே. அவற்றுள் ஒன்றையொன்று மறுப்பனவுமல்லவோ காணக்கிடக்கின்றன. அங்ஙனமாகச் சுத்தாத்வைத சைவக் கட்டுரைகளை அவை ஏன் பிரசுரியா? பிரசுரியாவாயின் அப்பத்திரிகைகளை அச்சைவர் ஏன் வர்ஜித்தல் கூடாது? சைவ சந்தாதார் அப்பத்திரிகைகளுக்குக்கொஞ்சமா? யார்யார் வெளிநாடுகளில் நடந்த சர்வமத மகாநாடுகளுக்குப் போய் அங்குச் சைவப் பிரசாரங்கள் பண்ணினார்? சில நாட்களுக்கு முன் கல்கத்தாவில் இராமகிருஷ்ணபரமஹம்ஸரின் விழாவை யொட்டி நடந்த சர்வமத மகாநாட்டிற் சென்று சைவப் பிரசங்கம் பண்ணிய தமிழச் சைவ ஆண்பிள்ளை எவன்? எல்லாம் போகட்டும். இந்நாட்டில் ஆங்கிலக் கல்வியே மக்களைச் சர்க்காரோடு நெருங்கிப் பழக வைக்கவல்லது. தமிழ்ச் சைவரின் ஆங்கிலக் கல்வி அந்த வகையிலாவது சைவத்துக்குப் பயனளிக்கின்றதா? சைவம்ஸிவிலிமாக்களால் நிந்திக்கப்படுகின்றது; பிளேட்டின் பரிமுசல்களால் நிந்திக்கப்படுகின்றது; தூஷணைப் பிரசுரங்களால் நிந்திக்கப்படுகின்றது. அச்சைவர் சர்க்காரை யடுத்து அந்நிந்தைகளை ஏன் பரிகரித்துக்கொள்ளுதல் கூடாது? செயற்கரிய செய்மினென்றால் அவர் நடுங்குகின்றனர். தமிழ் நாட்டிற்றானும் சைவத்தைக் காக்க அவராங்கிலம் உதவுகின்றதா? இல்லையே. புழக்கடைத் திண்ணைகளே அவருக்கும் பிரசங்க மேடைகளாகின்றன. ஆண்டும் அவர் சைவப் பிரசங்கமா செய்கின்றனர்? ஆம்மம்ம! வாந்தி மாத்திரை வேணும் வேண்டார். அவ்விஷயம் தனியே விளக்கப்படும். ஆனால் ஜே. எம். நல்லசாமிப்பிள்ளை யென்றொரு பெரியாரிருந்தார். தப்பிப் பிறந்தவரவர். அவர் தமிழ் வடமொழி ஆங்கிலமென்னும் மும்மொழி வல்லார். சைவாபிமானமும் அவரிடம் அதிகம். அவர் ஆங்கிலத்திற் பல சைவ நூற்களை மொழிபெயர்த்தார்; 'சித்தாந்த தீபிகை' யென்ற பத்திரிகையை நடத்தி அதிற் பல சைவக் கட்டுரைகளை வெளியிட்டார்; அயல் நாடுகளில் அவ்வப்போது நடந்த சர்வமத மகாநாடுகள் பலவற்றிற்சென்று பலசைவப்பிரசங்கங்கள் செய்தார்; பல ஆங்கில மேதாவிகளோடு சைவசம்பாஷணைகள் செய்து அதன் பெருமையை அவர்களுக்குத் தெரிவித்தார். பெசண்டும் அவர் வசப்படுஞ் சமயமாயிருந்தது. அவ்வம்மையின் தவக்குறைவாற்போலும் அவர் அதற்குட் சிவபதமடைந்தார். சைவமென்றொரு சமயமுண்டென்பதை மேனாட்டா ரறிந்ததே அவராற்றானென்பது மிகையாகாது. அவர் புகழ் என்றும் எங்கும் நிலவுவதாக. அவர் விட்டுப்போன வேலையைத் தொடர்ந்து நடத்த இன்றுவரை ஆங்கிலம் படித்த தமிழச் சைவ ஆண்பிள்ளை எவனுங் காணப்படவில்லை. அந்தப் புருஷன் வரும்நாள் என்று?

உ

கிரீடம்.

(போத்தனூர் வைத்தியர் திரு, வேங்கடநாராயண சர்மா அவர்கள்.)

அனைத்தல கரசர்களுக் கரசரான உமைபாகனது, கிரீட முடியிற் பதியப்பெற்ற மணிகள்போன்று திருத்தொண்டர்கள் விளங்குகின்றார்கள். ஈசனும் அடியார்களைச் சிரத்தாலே தாங்குகிறானென்றால், "அடியார்க்கடியேன்", "அடியார்க்கெளியேன்" முதலான உண்மை வாசகங்களை ஊன்றி நோக்கவே அப்பெம்மான் நதியையும் மதியையும் முடியிற்கொண்டான் போலும். அடியார்களிடத்து அவனுக்குள்ள அன்புதானென்னே! (அன்பே சிவம்) "அன்புற்றமர்ந்த வழக்கென்பவையகத் தின்புற்றாரெய்துஞ் சிறப்பு" (திருக்குறள்) அன்பென்ற கடமைக்காகப் பயன் பாராத் தவந்தாங்கிய திருத்தொண்டர்களைப் பெருமகிழ்வொடு திருமுடியேற்றிய திருவாளன் பெருங்கருணையால் ஓர் சக்கரவர்த்தி தன் திருக்குமாரனுக்குத் திருமுடி சூட்டுதல்போல நம்முடிமேலடி சூட்டலே பெருங் கிரீடமாகும். தகவுடையோர் சிந்தையிலுஞ் சென்னியிலும் வீற்றிருக்கும் சீர்த்தியானின் சீர்பரவும் சிறப்பாளர்க் கணித்தாம் கிரீடத்தினு முயர்ந்த தொன்றுண்டோ?

கிரீடமணிதல் முடிமன்னர்களுக்கே யுரித்தாம். கிரீடத்தில் பேராளன் பெருமை போலச் சீரொளி மணிகள் பல பதித்தல் பழமையே. மணிகளைத் தேர்தல் தேர்ச்சிமிக்கோர் கடனே. ஆமோதித்தல் அமைச்சரது அங்கமாகும். தேர்ந்த கற்கள் போதா விடத்துத் தேராவற்றிலுந் தேரப்படும். தேராமற் றேற்றியவை கிரீடத்தின் பின் பந்திக்காம். முன்பந்திக்கு முனையாவிடத்துப் பின்பந்திக் கேற்புடைத்தாம் பெரிதே. எவ்வகையினும் எம்மிருப்பு முடிக்கிரீடமல்லவோ! இச்சையில் வல்லவர் மெச்சும் விருந்தான அக்கிரீடப் பதிப்பில் பதிய அன்பனே! உனக்கு இச்சையா? இலச்சையா? இலச்சை விட்டு இச்சைகொண்டு பிச்சையென நச்சி நின்றால் நிச்சயமாக இச்சக மெச்சப் பெரும்பேறுபெறலாம். இப்பேற்றிற்குத் திருத்தொண்டே நுழைகதவாகும். உலக ஊழியத்தின் முன்னணியிலுள்ளோர்க்கு விருந்தில்முன்பந்தியும் பின்னணியிலுள்ளோர்க்குப் பின்பந்தியுமாம்.

அழகான கைலாயத்தின் கண் மானததடாகம் ஒன்றுள்ளது நினைவிலிருக்கட்டும். அருட்சத்தி பொங்கவும், ஆன்மாக்கள் உய்யவும் எம்பெருமானோடு மானந்தக் கூத்தின் கண்கொள்ளாக் காக்ஷியிற்கலந்த அடியார்க ளனேகருள்ளும் இரத்தினக் கிரீடங்களணியப்பெற்று முன்பந்தியில் வீற்றிருப்பவர்களே பேராளன் பெருந்தன்மைகளைப் பலகாலும் பக்குவர்களுக்குப் பரிவுடனோதிய உத்தமர்களாம். அத்தகைய திருத்தொண்டி லீடுபட்டிசைய இச்சையுள்ளாரொருவன் செய்யவேண்டிய உண்மையான முதற் கடமை பெரியாரைத் துணைக்கொள்ளலேயாம்.

"அரியவற்றுள்ளெல்லா மரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல்" (திருக்குறள்)

'எவர்பெரியர் எவர்சிறியர்? யாவுமுனை யன்றி யுண்டோ'

என்ற தாயுமானவரின் பாவின் பக்குவத்திலுள்ளோர் இறைவனையும் அவர் திறமுணர்ந்தோரையுமே எவரினும் பெரியோரென வோர்ந்து அவரையே தந்தமராகப் பேணிக்கொள்வர்.

"குணநாடிக் குற்றமு நாடி யவற்றுண்
மிகைநாடி மிக்க கொளல்" (திருக்குறள்)

பெரியார் பலதிறப்பட்டனரேனும் உடல்நலத்தைக் காட்டினும் மனுச்சோழன் போன்று உயிர்நலம் ஓம்பி யுறவாடி மறைவழிபுகுந்து அருள்விழிகொண்ட அறவோரே பெரியோராவர். குற்றங்கடிதலும் தள்ளலும் சமயமுணர்ந்து நற்றவங் கொண்ட பத்தர் பான்மையாம்.

"அரிய கற்றாசற்றார் கண்ணுந் தெரியுங்கா
லின்மை யரிதே வெளிறு" (திருக்குறள்)

குற்றங்களின் சிறு பெருநிலைகளையும் அதிகாரிகளின் படிகளையும் காலத்தாற்றெளிந்து குற்றங்கண்ட விடத்து அக்குற்றமுடையாரைக் கடிதலும் சட்டை செய்யாதிருத்தலுமே இங்கே கூறப்பட்டதாகும்.

"அப்பாநான் வேண்டுதல் கேட்டருள் புரிதல்வேண்டும்
ஆருயிர்கட் கெல்லா நானன்பு செயல்வேண்டும்
எப்பாரு மெப்பதமு மெங்கணு நான்சென்றே
எந்தைநின தருட்புகழை யியம்பி யிடல்வேண்டும்."

என்றாங்கு எவ்வுயிர்களிடத்தும் அன்புபூண்டு இறைவர் புகழையே யெங்கணும் பரப்பி இறைவர் திருவருளை வேண்டுவோரே இறைவர் திருவடியைச் சிரமேற் கிரீடமாகத்தாங்கி

"நன்னலத்த சேவடியென் றலைமேல் வைத்தார்
நல்லூரெம் பெருமானார் நல்லவாறே" என்ற பெரியார் திருவாக்குக்கிலக்கியமாக விளங்குவர்.

"நன்மைபெரு கருணெறியே வந்தணைந்து நல்லூரில்
மன்னுதிருத் தொண்டனார் வணங்கிமகிழ்ந் தெழும்பொழுதில்
உன்னுடைய நினைப்பதனை முடிக்கின்றோ மென்றவர்தம்
சென்னிமிசைப் பாதமலர் சூட்டினான் சிவபெருமான்."

என்ற தெய்வப்புலமைச் சேக்கிழார் பெருமான் றிருவாக்கையும் திருநீறு கண்மணி சடைமுடியினையே உறுசாதனமாகக் கொண்டு அரசாண்ட மூர்த்தி நாயனாரின் கீர்த்தியையும் ஓர்ந்து சிவபெருமானாரின் சேவடிக்கணாம் சென்னி மன்னிச்சுடரப் பெறுதலே உயரிய கிரீடமென்பது தெளிக.

௨.

உடம்பு மூவகைப்படும்.

(திருவல்லிக்கேணி, திரு. நல். கண்ணப்ப முதலியார் அவர்கள்)

பூதசார உடம்பு - யாதனா உடம்பு - பூதபரிணாம உடம்பு என மூவகைப்படும்:—

(1) பூதசார உடம்பு:— நரை திரை மூப்பற்று என்றும் ஒருபடித்தாய்த் தேவலோக போக சுகத்தையே அனுபவித்தற்கு வன்மை பெற்றிருப்பது. எனவே யுத்தமுகத்தில் எவ்வகைத்தான துன்பம்வரினும் அவற்றால்உயிர் இறவாது வாழுந்தன்மையுடைத்து. பூதசார உடம்பை உயிரடைந்த காலத்து நரகத்துன்பத்துக் கேதுவாயுள்ள பாவத்தை யொழிக்கும் உறுதியைப் பெற்றதின்று. புண்ணியானுபவத்துக்குரியது.

(2) யாதனா உடம்பு:—அஃதேபோல் நரகயாதனையில் எவ்வகைத்தான துன்பம் அனுபவிக்கநேரினும் உயிர் இறவாது நைந்து நைந்து வருந்தி அதிற்றானே ஆழ்ந்து கிடக்கும் தன்மையுடைத்து. யாதனா உடம்பையடைந்த காலத்துச் சுவர்க்கலோகபோகத்துக்கேதுவாயுள்ள புண்ணியத்தைத் தேடும் உறுதியைப் பெற்றதின்று. பாபானுபவத்துக்குரியது.

(3) பூதபரிணாம உடம்பு:—நரை திரை மூப்பற்றுச் சுகத்தை யநுபவித்தற்குரியவன்மையையும்ஊழ்வலியான்வரும்துன்பத்தைப் பொறுத்து அநுபவித்தற்குரிய வன்மையையும் உடையதன்று அஃதேயுமன்றி மாமிசாதிகள் ஒழியப்பெறின் உயிரும் ஒழியும் மென்மைத் தன்மையுடையது. பூதசாரசரீரம் போகசாதனத்துக்கும், யாதனாசரீரம் துன்பசாதனத்துக்கும் வன்மை பெற்றிருப்பது போல் மென்மைத்தன்மை யுடைய பூதபரிணாம சரீரம் மோக்ஷசாதனத்துக்கு வன்மையுடைத்து. பூதபரிணாம உடம்பை யடைந்த காலத்து அது பாவத்தை யொழிக்கும் வன்மையைப் பெற்ற புண்ணியத்தையும், வருந்திச்செய்யும் புண்ணியத்தை யொழிக்கும் வன்மையைப்பெற்றுள்ள பாவத்தையும் ஒழித்து இனிப் பிறவாநெறிக் கேதுவாயுள்ள சிவபுண்ணியத்தைத் தேடும் உறுதியைத்தந்து அவ்வுறுதியால் குஞ்சிதபாதத்தை யடைதலாகிய முத்தியிற் கூட்டிப் பேரின்பத்தை யடையும் சிவானுபவத்துக்குரியது.

தஞ்சைநகரில் நடந்த கலைவாணர் கூட்டம்.

(The Tanjore Provincial Educational Conference) சென்னை மாகாணத்தின் பலபகுதிகளிலிருக்கும் ஆங்கில ஆசிரியர்பலர் திட்டஞ்செய்தவாறு, 1937 எப்ரல் 6, 7, 8-ம் நாட்களில் தஞ்சையில் கூட்டம்நிகழ்ந்தது. இதன்பொருட்டு வெளியிடப்பட்ட நிகழ்ச்சி நிரலில், தொடக்கக் கல்வி, (Elementary Education) பள்ளியிறுதிக்கல்வி (School Final Education) உடற்பயிற்சிக் கல்வி (Physical Education) நிலநூற் கல்வி (Geographical Education) ஆதிய பகுதிகளைப்பற்றி விரிவான ஏற்பாடுகள் செய்யப்பெற்றிருந்தன. இவற்றிற்கான ஆரவாரத்தில் இப்பேரறிஞர் பண்டிதர்களை மறந்தாரில்லை. இவர்களை நினைவுகூர்ந்து, பண்டிதர் கூட்ட (Pundits Conference) மொன்மட்டும் கண்டு, நிகழ்ச்சியின் விவரங்களைக் குறிக்காது அரைமணி நேரம் ஒதுக்கப்பட்டிருந்தது. பண்டிதர் கூட்டத்தில் தலைமையிருத்தற்குப் புலமை நிரம்பிய ஒருவரைக் காணாராய், இம்மாகாணத்தின் காங்கிரசுத் தலைவரையே தலைமையில்வைத்தனர். அரசியற் குழப்பத்தில் தட்டழிந்து நிற்கும் அறிஞர்கள் யாது செய்ய வல்லார்? நாட்டுமொழிகள் மங்கையும் வளனும் உறுதற்கு ஆவன இயற்றும் வழி அறியாது, இந்திமொழியே தேசமொழியென்றும், கட்டாயப்பாடங்களில் ஒன்றாக அதனையும் மாணவர் பயிலச்செய்தல் வேண்டுமென்றும் கூறிய அரசியற் றலைவரின் கூற்றையே ஆராய்ச்சியின்றித் தமது முடிபாக ஏற்றுக்கலைந்தனர். இக்கூட்டத்தினரின் ஏழை மதிக்கு மிகமிக இரங்குகின்றோம்!! இந்திமொழி பயின்றறியாத மாந்தர்கள் வடநாட்டிலும் தென்னாட்டிலும் கோடிக்கணக்கினராயிருக்க அதனைத்தேசத்தின் பொதுமொழி என்பது பொய்க்கூற்றல்லவா? தமிழ்நாட்டு மாந்தர் இந்தி மொழியைப் பயிலவேண்டிய அவசியந்தான் என்னை? இந்திமொழியானது தமிழ்மொழியைப் போன்றதொரு உயர்தனிச் செம்மொழியா? 'கம்பனைப்போல், வள்ளுவர் போல், இளங்கோவைப்போல் பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை,' 'யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவதெங்கும் காணோம்,' எனும் புகழுரைகளிற் காணும் சிறப்புகள் எவையேனும் இந்திமொழியில் காணுமாறுளதா? இந்தியநாட்டினர் நூற்றுக்குத்தொண்ணூறினும் மேற்பட்டவர் கல்லா மாந்தராய் இருப்பவும், பன்னூறு ஆண்டுகளாய்ச் செய்துவரும் முயற்சிகளாலும் இத்தகைய பெருந்தொகுதியினர் எழுத்தறியாதிருப்பவும், இவ்விழி தகவு தீர்வதற்குத் தாய்மொழியோ ஏற்ற கருவியெனக்கொண்டு ஆவனசெய்வது முதற்கருமம் என்பதோராது இந்திமொழியை வளர்க்க முற்படுவது 'கருந்தனம் கைத்தலத்த உய்த்துச்சொரிந்திட்டு அரிப்பரித் தாங்கெய்த்துப் பொருள்செய்திடல்' என்னும் முதுமொழியை நினைப்பூட்டுகின்றது. நம்மிடம் என்றோவாவிருக்கும் வடநாட்டவரை வரவேற்று உபசரிக்கவும், நாம் என்றோ வடநாடு சென்றால் அங்குள்ள மக்களுடன் உரையாடவும் கருவியாயுள்ள காரணத்தால் எம்மொழியைப் பயிலுவதே கருமமென வன்கண்மை பேசும் தலைவர்களின் பேதைமையும், அதற்குச் செவிசாய்க்கும் நம்மவரின் அடிமை மனப்பான்மை (Slave Mentality) யும் எள்ளி நகையாடற் பாலன. தமிழ்நாட்டின் நலன்களைப்பேணும் கருத்துடைய அறிஞர்கள், அரசியல் வாதிகளின் பிதற்றுரைகளால் மயங்காது விழிப்புடனிருந்து 'தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல்வேண்டும்.' (தமிழ்ப்பொழில்)

அணிலாடு முன்றிலார்.

குறுந்தொகை. பாலை.

(சின்னகாஞ்சிபுரம் திரு, சேனாபதி நடேச செட்டியாரவர்கள்.)

41\. காதலர் உழையராகப் பெரிதுவந்து
சாறு கொள்ளூரின் புகல்வேன் மன்ற
அத்த நண்ணிய அங்குடிச்சீறூர்
மக்கள் போகிய அணிலாடு முன்றில்
புலப்பில் போலப் புல்லென்று
அலப்பென் தோழி அவர் அகன்றஞான்றே.

இது பிரிவிடை வேறுபாடுகண்டுகவன்ற தோழிக்குக் கிழத்தியுரைத்தது. (அணிலாடு முன்றிலார்)

செந்தமிழ்ச்செல்வி சிலம்பு 15 பரல் 8-ல் 382-ம்பக்கம் முதல் இலங்கையடிகள் வித்வான் திருவாளர், இரா. சிவ. சாம்பசிவன் எனும் தமிழ்ப்பேராசிரியர் மேற்படி செய்யுளின் விளக்க உரை உதவியுள்ளார்கள்.

மேற்படி செய்யுளில் 4-வது வரியில் "அணிலாடு முன்றில்" என்ற இவ்வழகிய தொடரை அமைத்த காரணத்தாலேயே இச்செய்யுள் ஆசிரியரை "அணிலாடு முன்றிலார்" என்று குறிப்பிட்டனர் தொகுப்பாசிரியர் என்றும் எழுதியுள்ளார்கள்.

இக்குறுந்தொகை 54-வது செய்யுளில் "கவண் ஒலி வெரீஇயக் கானயானை கைவிடுபசுங்கழை மீன் எறிதூண்டில்நிவக்கும் கானகநாடன்" என்பதில் "மீன் எறிதூண்டில்" என்பதனை "எனை உவமம்" என்றார் பேராசிரியர்" என்று நச்சினார்க்கினியர் எழுதியுள்ளதால் ஈண்டும் "அணில் (களித்து) ஆடும் முன்றில் அணில் புலம்பும் முன்றில்" என்று ஒரு காதலி தன் காதலர் உடன் இருந்துழி உவந்தும், அகன்றுழி அலந்தும் அணில்போல் மகிழ்வாள் வருந்துவாள் என்பதை உவமித்த உவமவாசகத்தால் சிறப்புற்ற கருத்தமைந்தது இச்செய்யுள்.

இப்புலவர் பெருமான் குறுந்தொகையில் கண்ட 41-வது செய்யுள் ஒன்றே இயற்றியவரா? வேறு செய்யுள் உண்டா? இப்பெயர் ஒரு புலவரைக் குறிக்குமா? இச்செய்யுளின் நாயகரான காதலரைக் குறிக்குமா? என்பதை அறிய ஆவல் கொண்டே இது எழுதலானேன்.

செம்பொருள் செறிந்த இச்செய்யுளால் பழமைத் தமிழ்ப்புலமை வாய்ந்த அணிலாடு முன்றிலார் எனும் புலவர் பெருமான் நாடோறும் தம் இல்முன்றில் தின்பண்டங்கள் தூவி அணில்கள் சிறப்பாகவும் இதர சிறு பறவைகள் பொதுவாகவும் தமக்குப் பசியும் பகையும் அச்சமும் இல்லையாம்படி செய்து அவை களித்து ஆடக் கண்டு இயற்கையாக மகிழ்வு எய்தும் பெருமான் ஆதலால் அவர் தம் பெயரும் தம் இல்முன் அணில் வளர்க்கும் பண்பினால் அணிலாடு முன்றிலார் என்ற சிறப்புப் பெயரும் பெற்றனர்போலும்.

இப்பொலிவு கொண்ட பெயர்க் காரணத்தால் பிராணிகள் கூட மகிழ்தலும், பிரிய வருந்தலுமான மனப்பான்மைகளை நன்கு அறிந்து மக்களின் மனநிலைகளையும் ஒருங்கே உணர்ந்ததால் தாம் கொண்ட இக்கருத்தை விளக்கவே இச்செய்யுளில் ஒரு காதலி தன் காதலரை ஒரு சிறிது கால அளவு பிரிந்தாலும் அப்பிரிவு ஆற்றுதவளாய்த் தன் மனம் வேறுபாடுற்று வருந்தியதை உணர்ந்த தோழிக்குக் காதலி தன் மனக் கிடக்கையைக் கூறியதாகச் சொல்வது:— அது காதலர் தம் இல்லத்து உடன் இருந்தால் அவ்வில்லம் சாறுகொள் மன்றம்போல் ஆகும் என்றும் தாம் வாழும் சீறூரேனும் பேரூர்போலப் பொலிவு கொள்ளும் என்றும், எப்போதும் தம்மைச் சூழவாழ்வார்களுடன் புகழ்ந்தும் பெரிது உவந்தும் பேசுவாள் என்றும் ஆனால் அவர் தம்மை விட்டுப்பிரிந்தால் தாம்வாழும் ஊரும் பரிதியஞ் செல்வன் மறைய இருள் சூழ்ந்து பொலிவு இழந்ததே போலும் சூழவாழும் மக்கள் அவ்வூரை விட்டுப்புறம் போந்தனர் போலும் காணப்படும் என்றும், உணவுகொண்டு அச்சம் இன்றி தம்இல்முன் களித்து ஆடும் அணில் கூட்டங்களும் காதலரைக் காணப்பெறுமையால் அவைபுலம்பும் முன்றிலாக விளங்கும் என்றும் இந்நிகழ்ச்சியைத்தான் காணுந்தோறும் அப்பிரிவை நினைக்குந்தோறும் அக்காதலியும் இல்உள்ளால் இருந்து புல்லென்று அலமந்துமனம்வாட்டமுறுவாள் என்றும் தம்மனத்தின் இயல்பினால் அமைந்த நிலையைத்தன் தோழிக்குச் சொன்ன கருத்துக் கொண்டதாகும் இச்செய்யுள்.

காதலர் தம் உழையராயின் இல்முன்பெரிதும் தான்வந்து புகழ்வதும் அவர்பிரிந்தழி கவன்று இல்முன் அலப்பதும் காதலியின் மனப்பான்மையை அறியலாகும்.

இச்செய்யுளின் பொருள்:—தோழியே! காதலர் தம் இல்லத்து உடன் உறையப்பெறின் என் இல்லம் பேரூரில் சாறுகொள் மன்றம்போல் ஆகப் பெரிது உவந்து புகல்வேன்; ஆனால் அவர் என்னின் அகன்ற ஞான்று அப்பேரூர் அத்தம் (சூரியன்மறை) இருள் நண்ணிய சீறூராகும். அங்குடி மக்களும் வெளிப்போந்த ஊர் போலாகும். காதலர் இருந்தழி முன்றிலில் களித்து ஆடிய அணில்கள் புலம்பும் முன்றிலாவதும், இதைக்கண்டு இல்உள்ளால் புல்லென்று அலமந்து மனம் மாறுதல் கொள்வேன் என்று காதலி தோழிக்குச் சொன்னது.

சாறுகொள் மன்றம்போல் புகழ்வதும் புலப்பதும் இக்கருத்தைக் கலித்தொகை பாலை 5-ம் செய்யுளில்,

கல்லெனக் கவின்பெற்ற விழாவாற்றுப் படுத்தலும் (பிரிந்தபின்)
புல்லென்ற களம்போலப் புலம்புகொண்டமைவதும்”

அத்தம் நண்ணிய சீறூர்: அத்தம்: அஸ்தம். காவல்
இன்மையால் கேடுசூழ்ந்த சிற்றூர் போலாகும் என்பதை,
“ஆள்பவர் கலக்குற அலைபெற்ற நாடுபோல்
பாழ்பட்ட முகத்தோடு பைதல் கொண்டமைவாள்”

என்றும்,

அங்குடி மக்கள் போகிய சீறூர் என்பதை,
ஓர் இராவைகலுள் தாமரைப் பொய்கையுள்
நீர்நீத்த மலர்போல நீநீப்பின் வாழ்வாளோ?

என்றதால் நீர் நிறைந்து தாமரை மலர்ந்த தடாகத்துள் நீர் நீங்கினாலும் இரவு நண்ணினாலும் அம்மலரின் மலர்ச்சியும் பொலிவும் நீங்குவதேபோல் காதலரின்பிரிவால் காதலிவருந்துவாள் என்றும், நீர் நீங்குதல் மக்கள் ஊர்ப்புறம் போதலையும், பரிதியஞ் செல்வனின் மறைவால் தாமரை மலர் குவிதல்போல் தம் காதலர் பிரிவால் மலர் ஒத்த தம் முகப் பொலிவு பெறுதலுங்கொண்ட உண்மை விளக்கம் நோக்கற்பாலது.

அணில் ஆடும் முன்றில் அணில் புலம்பும் முன்றில் இயற்கை மகிழ்வு எய்திய காதலர் அணில் களித்து ஆட உணவு உதவுதலையும், அவர்நீங்கிட காதலிஉணவு உதவினும் காதலரைக்காணாது அவை அஞ்சியும் களித்து ஆடாது மகிழாதுநிற்றலையும்கண்ட அக்காதலி.

இல்உள் புல்லென்று அலப்பேன் தோழி.

காதலர் பிரியவும் அவருடன் பயின்ற மக்கள் தம்இல்முன் பயிலாமையால் பிரிந்தனர் போலும், இருள்சூழ்ந்த ஊர்போலும், தாம் வெளிவாராமையால் கண்டதும் இல்உள்ளால் இருந்து வருந்துவாள் என்ற சீரிய காதலின் பண்பை விளக்கியது சிறப்புடைத்தாகும்.

குறுந்தொகை 41-ம் செய்யுளும் கலித்தொகை பாலை 5-ம் செய்யுளும் கருத்தில் தம்முள் ஒத்த தன்மையன என்பதும், தண்டமிழ்நாட்டுச்செந்தமிழ்ப் புலவர்கள் தாங்கள் கொண்ட கருத்தினை மைகளைச்செய்யுள் முகத்தால்நன்கு அறிவித்துள்ளார்கள் என்பதும், பண்டைக்காலத்துத்தமிழ்மக்கள் தம்இல்லங்களில் காதலியும் காதலனுமாகக்காதலைவளர்த்து மகிழ்ந்து உறைந்த ஒரு தூயநிலைமையினை எக்காலத்துமக்களும் எந்நாட்டுமக்களும் தம் மனத்துட்கொண்டு மகிழ்தல்வேண்டுமென்று ஒரு சீரிய கருத்துக்கொண்ட புலவர் பெருமக்களின் கருத்தறிந்து பொருள் விளங்குதலைசீரியதும் ஒழுக்கமுடையதுமாகும் என்பது எனது கொள்கை.

பூனைகண்ணை மூடினால் பூலோகம் இருண்டுவிடுமா? என்ற ஒரு பழமொழியுண்டு. தடாகத்துள்ள தாமரை மலர்கள் பரிதியஞ்செல்வனின் மறைவால் இதழ்கள் தைந்து கூம்புதலால் பூலோகம் தாமரை மலர்களும் பூமியும் இருள் சூழ்வதும் இயற்கையாதலும் பொழுது அறிவிக்கும் ஒருகருவியாக மலர்தலாலும் கூம்புதலாலும் காலை மாலை வேளைகளில் நீராடப் போவார் அறிந்தகொள்ளுகும்.

பரிதியஞ் செல்வன் ஒக்க தம் காதலர் ஒரு இரவு பிரிந்திருந்தாலும் தாமரை மலர்கள் தம் பொலிவு பெறுததேபோல் ஆதலும் செல்வனின் தோற்றத்தால் மலர்வதும் மகிழ்வதுமான பொலிவு கொண்ட முகத்தினர் காதலிகள் என்பது.

இத்தகைய காதலியும் காதலரும் வாழும் இத்தமிழ்நாட்டின் செய்யுள்களால் அறியப்படுதல் எளிதாதலும் இவ்வொழுக்கங் கொண்ட மக்களும் பலர் இருத்தலும் உரியராவார்களாக.

இக்கருத்தின் முடிபைக்கம்பருநாட்டுப்படலம் 10-வதுசெய்யுளில் 'உண்கள்வார் கடைவாய் மள்ளர் களைகலாது உலாவிநிற்பார் பெண்கள் பால் வைத்தநேயம் பிழைப்பரோ சிறியோர் பெற்றால்'

என்பதில் கள் உண்டு கடைவாய் வரையில் ஒழுகவிட்ட மள்ளரும் களைகல்லுவதற்குக் கல்லாது உலாவிநிற்கும் பெண்களிடத்துத் தாம்இளமையில் கொண்டநேயத்தை காதலை தாம்முதிர்ந்து பல சிறுவர்களைப்பெற்று வாழ்ந்தாலும், தவறநடவார்கள். என்று கவிச்சக்கரவர்த்தியும் காதலர் காதலிகளின் பண்பு விளக்கியது நோக்கற்பாலது.

உ

மகா கும்பாபிடேகங்கள்.

திருத்துருத்தி:—இது தஞ்சைஜில்லா குற்றாலத்தில் தேவாரம் பெற்ற திருத்தலம். "திருத்துருத்தி மேயானைத் தித்திக்கும் சிவபதத்தை" என்று திருவாசகத்தில் விதந்தோதப்பெற்றது. இத்தலத்தைச் சேர்ந்த ராஜகோபாலபுரம் ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரப் பெருமான் திருக்கோயில், பேட்டைவயல், திறைமங்கலம் ஜமீந்தார், தேவகோட்டைத் திருவாளர், ராம. அரு. அரு. ராம. அருணாசலச் செட்டியாரவர்களால் ஜீர்ணோத்தாரணம் செய்து இவ்வாண்டு வைகாசி உஉவ. அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம்சிவாகமமுறைப்படி செய்யப்பெற்றது. இத்திருப்பணிச் செல்வர், ஒவ்வொரு ஆண்டிலும் ஒவ்வொரு சிவாலய மகா கும்பாபிடேகம் செய்யும் நியமமுடையவர்.

வேலன்குடி:— இவ்வூர்ச் சிவாலயம் தனவணிக நகரத்தார்களின் ஒன்பது கோயில்களுள் ஒன்றாக விளங்குவது. இந்தக் கோயிலைச் சேர்ந்த நகரத்தார்கள் இத்திருக்கோயிலைப் புதுக்கித் திருப்பணி புரியத் தொடங்கி முப்பது ஆண்டுகளாயின. பெரும்பாகம் நிறைவேறிச்சிறுபாகம் நிறைவேறவேண்டுவதாக விருந்தது. கோயில் நகரத்தாரவர்களின் அங்கீகாரத்தைப் பெற்றுப் பங்காளிகளுள் ஒரு குடும்பத்தலைவராகிய தேவகோட்டைத் திருவாளர், சண்முகநாதன் செட்டியார் ஒரு நூறாயிரரூபா தம்சொந்தப் பணத்திலிருந்து திருப்பணிக்கு உதவினர். கருங்குளம் திருவாளர், வயிரவன் செட்டியார் முன்னின்று திருப்பணியைக் குறைவற நிறைவேற்றினர்.

இச்சிவாலயத்திற்குத் தென்மேற்கில் திருமாலுக்கு ஒருதிருக்கோயில் திருப்பணியும் செய்து நிறைவேற்றியுள்ளார்கள்.

இருகோயில்களும் கருங்கற்பணிகளாகச்சிற்பநூன்முறையே பொற்புற அமைக்கப்பெற்றுள்ளன. விதிப்படி யாகசாலைகள் அலங்கரித்து இவ்வாண்டு வைகாசி உஎவ அனுக்ஞை விக்னேசுவரபூஜையாதிய தொடங்கிச் சிவமகாயாகம் செவ்விதிற் செய்யப்பெற்று ஆனிமீ ருவ ஸ்ரீகாமாக்ஷியம்பாசமேத ஸ்ரீ கண்டீசுவர சுவாமிக்கும், மூத்தபிள்ளையார் முருகவேளாதிய மூர்த்திகட்கும், பரிவார மூர்த்திகட்கும், திருமகள்சமேத ஸ்ரீ தேசிய நாராயணப் பெருமானுக்கும் அஷ்டபந்தன மஹாகும்பாபிடேகங்களும், மகாபிடேகங்களும் அதிவிமர்சையாகச்செய்யப்பெற்றன. அன்றிரவு ஐம்பெருங் கடவுளர் தத்தமக்குரிய வெள்ளிவாகனங்களிலும் சீதரன் தங்கக் கெருட வாகனத்திலும் திருப்பவனி வந்தது மிகச் சிறப்பாக

விருந்தது. மிகவினிமையாக வேதகீதநாதசுரங்கள் ஒலித்தன. இலட்சக்கணக்கான மக்கள் தெரிசித்தின்புற்றனர். அந்தணர், அடியவர், நகரத்தார் ஆகிய அனைவர்க்கும் அறுசுவையுடன் பெருவிருந்தளிக்கப்பெற்றன. இத்தலம் கோட்டையூரை யணித்தாய்க் கொண்டதாகலின் வந்தவர்கள் தங்குவதற்கு மிக்கவசதியிருந்தது. சிவாலயத் திருப்பணிக்கும் செங்கண்மால் கோவில் திருப்பணிக்கும் எழுலெட்ச ரூபா ஆகியிருக்கின்றனவாம். அழகாக வமைந்திருக்கின்றன. இவ்வேலங்குடிக் கோயிலின் அடிமைக்குடிகளாகிய நற்றன வணிக நற்குலம்தழைத்து நாளுமோங்கி வளரக்கண்ணனும் போற்றும் கந்தனைப்பயந்த காமாக்ஷிசமேத கண்டீசுவரர் கருணைபாலிப்பாராக.

கோட்டையூர்:—ஸ்ரீ யோகானந்தேந்திர சரஸ்வதி சுவாமிகளின் அதிஷ்டான ஆலயம், கோட்டையூர் தனவணிக நகரத்தார்களும், தனவணிகப் பெண்மணிகளும், பிறரும் உதவிய பொருள் கொண்டு கெர்ப்பக்கிருகம், அர்த்தமண்டபம், மகாமண்டபம், ஆவரணமண்டபம், சுற்றுமதில், விமானமுதலியகருங்கற் றிருப்பணியும் திருவாளர், க. வீ. சொ. அழகப்பய்யா அவர்களால் ஆலயமுகப்பில் அலங்காரக் கொட்டகையும் அமைக்கப்பெற்று இவ்வாண்டு ஆனித்திங்கள் ஐந்தாம்நாள் அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகமும், அன்றிரவு ஆதிசங்கர பகவத் பாதாசார்யார் திருவுலாவும் பக்தகோடிகளால் விதிமுறைவழியே அதிவிமரிசையாகச் செய்யப்பெற்றன. அந்தணராதிய நான்கு வருணத்தாரும் கோயிலூர் ஆண்டவர் குழாத்தினரும் அன்புடன் வந்து தரிசித்தின்புற்றனர்.

திருக்கோள்ளம்பூதூர்:—பூவிரிபொழில்சூழ்காவிரிவளஞ்செறி சோணாட்டின்கண் திருக்கூட்டத்தாருடன் திருஞானசம்பந்தப் பெருமானார் எழுந்தருளித் தேவாரத் திருப்பதிகமோதி ஓடம் உய்த்த சிறப்புவாய்ந்த இத்திருத்தல சிவாலயத்திருப்பணி, இளுப்பைக்குடிக்கோயில் சூடாமணிபுரமுடையாராய் நற்சாந்துப்பட்டி நற்றனவணிக நன்மரபுதித்த திருவாளர், பெ. ராம. இராமன் செட்டியாரவர்களால் இற்றைக்கு ஆறு ஆண்டுகளின் முன்னர்த் தொடங்கிக்கெர்ப்பக்கிரக, அர்த்தமண்டப, மகாமண்டப, சோபான மண்டப, நீராவி மண்டப, பிரகாரமண்டப, திருமாளிகை மண்டப. விமான கோபுராதிகளெல்லாம் சிற்பநூல் முறையே கற்பணியாகப் பொற்புற வமைக்கப்பெற்று வண்ணச் சுதைகள் செய்தும், திருக்குளம் திருத்திக் கட்டப்பெற்றும், முள்ளிநதியின் மேல்கரையில் திருஞானசம்பந்தப் பெருமானார் தமது திருக்கூட்டத்தாருடன் வந்து தங்கிய இடத்திலுள்ள நம்பர்கோயிலைக் கருங்கற்பணி புரிந்தும் ஆறுலெட்சரூபா செலவுசெய்து நிறைவேற்றப் பெற்றுள்ளன. திருப்பணிச்செல்வர், பெ. ராம இராமன் செட்டியாரவர்களின் இளவலாகிய பெ. ராம. இலக்குமணச்செட்டியாரும்

தனயர்களாகிய பெ. ராம. ராம. இராமநாதன் செட்டியார் இலக்குமணன் செட்டியார், சிதம்பரஞ் செட்டியார் ஆகியவர்களும் நம்பர் கோயிலுக்கு இவ்வாண்டு ஆனித் திங்கள் எட்டாம் நாள் அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகமும், அன்று தொடங்கி அனுக்ஞைபெற்றுக் கணபதிவழிபாடு ஆதியசெய்து சிவாகம விதிப்படி யமைத்த அணிசெய்த யாககூடத்தில் கலச கடஸ்தாபனம் செய்து சிவாசாரியர்களால் சிவ வேள்வியைச் சிறப்பாகச் செய்து ஸ்ரீவடிவுடையம்பிகைசமேத வில்வவனநாதருக்கும், வலம்புரிவிநாயகர், முருகவேள், கல்லாலினீழற்கடவுள், சண்டேசுவரர் ஆகிய மூர்த்திகட்கும், சுற்றுப்புறங்களில் சூழ்ந்துள்ள மூர்த்திகட்கும் ஆனிமீ ௮உ அஷ்டபந்தனமகாகும்பாபிடேகமும், அன்றிரவு ஐம்பெருங்கடவுளர் திருவுலாவும் மிகச்சிறப்பாகச் செய்வித்தனர். அந்தணாளர்கள் பந்திபந்தியாய்ச்சந்தமறைசாற்றினர். தமிழ்மறைவாணர்கள் தேவார திருவாசகாதி திருமுறை யோதினர். சைவசித்தாந்த மகாசமாஜ விசேஷமகாநாடு பண்டிதமணி, திருவாளர், மு. கதிரேசச்செட்டியாரவர்கள் தலைமைவகிக்கச்சைவமெய்யன்பர்களின் சீரிய விரிவுரைகளுடன் நடைபெற்றது. இசைப்பகுதிக் கூட்டமும் இசைவல்லோரால் இனிது நடைபெற்றது. ஸ்திரமாக மின்சார விளக்குகள் அமைக்கப்பெற்றன. இலட்சக்கணக்கான மக்கள்வந்து தெரிசித்தின்புற்றனர். அந்தணராதியோரனைவர்க்கும் இடவசதிகளும் அறுசுவையினும் உறுசுவைத்தாய உணவு வசதிகளும் முறையாகச் செய்யப்பெற்றன. நதி பெருகிவந்து தண்ணீர் வசதிதந்தது. மகாகும்பாபிஷேகப் பத்திரிகைகள், மலர், மகாநாட்டுப்பத்திரிகை யாதியவைகளால் அன்பர்கள் வெகுசிரத்தையுடன் அழைக்கப் பெற்றிருந்தனர். அரசியல் மகாநாடும் நடைபெற்றது. பாடகச்சேரிச்சுவாமிகள் முன்னின்று பல்லாயிரக்கணக்கான ஏழை மக்கட்கு அன்னமளித்தனர். எல்லாவகையானும் இம்மகா கும்பாபிஷேகத்தை இனிதுநடாத்திய திருப்பணிச்செல்வர்கள் சிறந்தநலம் பல பெற்று என்றும்வாழக் கொன்றைசேர் சடையான் நன்றே யருள்வாராக.

வையச்சேரி:— திருத்தென்குடித்திட்டைக்கு அணித்தாயுள்ள இவ்வூர் இலக்குமி நாராயணப் பெருமாளுக்குப் பக்தகோடிகளால் இவ்வாண்டு ஆனித் திங்கள் பதினான்காம்நாள் மகாகும்பாபிஷேகம் மாண்புடன் நடைபெற்றது. அன்பர் பலர் வந்து தெரிசித்தின்புற்றனர்.

தாழைக்குடி:—திருத்தென்குடித்திட்டையை யொட்டியுள்ள இவ்வூரில் மூத்தபிள்ளையாருக்கு இவ்வாண்டு ஆனித்திங்கள் எட்டாம் நாள் அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் இனிது நடைபெற்றது. அன்பர்கள் வந்து தரிசித்தருள் பெற்றனர்.

திருமாற்பேறு:— சான்றோரைத் தன்னகத்தே கொண்ட தொண்டை நன்னாட்டின்கண் திருஞானசம்பந்த மூர்த்திநாயனாராலும், திருநாவுக்கரசு நாயனாராலும் தேவாரம்பெற்று ஆறு திருப்பதிகங்களுடன் திகழும் இத்திருத்தலம் மாலுக்குச் சக்கரம் அருளிய மகிமையுடையது. இத்திருத்தல சிவாலயத் திருப்பணியை மாற்றார்க்கோயில் உறையூர் வதப்பினரும், தேவாரம் ஜமீந்தார்களுமாகிய தேவகோட்டைத் திருவாளர்கள், அள. வீர. சித. இலக்குமணச் செட்டியார், வீரப்பசெட்டியார், இராமநாதச் செட்டியார் என்னும் மூன்று சகோதரர்களும் முற்றும் புதிதாகக் கர்ப்பக்கிருக, அர்த்தமண்டப, மகாமண்டப, பிரகாரமண்டப, விமான கோபுராதிகளுடன் கருங்கற் பணியாகச் சிற்பநூன் முறைமையமைத்து வண்ணச்சுதைகள் செய்து பொற்புற நிறைவேற்றி ஆனிமீ ருஉ அனுக்ஞையும், விக்னேசுவர பூசையும், கஉவ விசித்திராலங்காரங்களுடன் கூடிய யாகசாலையில் கடஸ்தாபனமும் செய்து சிவாகம முறைப்படி சிவாச்சார்யர்களால் வேள்வியைச் சிறப்பாகநிறைவேற்றி கருஉ அஷ்டபந்தனமகா கும்பாபிஷேகத்தையும், அன்றிரவு ஐம்பெருங்கடவுளர்திருவுலாவையும் மிகமேன்மையாகநடாத்துவித்தனர். இலட்சக்கணக்கானமக்கள் தெரிசித்துத்திருவருளின்பப் பேறுபெற்றனர். ஆரியநான் மறைபார்த்தன. தேவாராதி திருமுறை பிறங்கின. நாதகீதங்கள் நன்றுகறங்கின. மெய்கண்டார் கழகத்தினரும், காரைச்சிவனடியார் திருக்கூட்டத்தினரும் சைவவிரிவுரைகள் செய்தனர். அந்தணராதியோரனைவர்க்கும் அமிழ்தினுமினிய வுணவாதியுபசாரங்கள் செய்யப்பெற்றன. திருப்பணிச் செல்வர்கட்கு ஸ்ரீ அஞ்சனாட்சி சமேத மணிகண்டேசுவரர் அருள்மிகப்புரிவாராக.

திருவையாறு:—ஸ்ரீ அறம்வளர்த்த அம்மையார் திருக்கோயில் திருப்பணிநிறைவேற்றித்திமாமீ உய்உ மகாகும்பாபிஷேகம்நடைபெற்றதை வைகாசிமாதச் சிவநேசனில் வெளியிட்டுள்ளோம் ஆனிமாதம் அஉ மண்டலாபிஷேகம் மாண்புடன் நடைபெற்றது.

இது ஈசுவரவருடமாகையால் ஈசுவர கிருபையால் மகாகும்பாபிடேகங்கள் பல நடைபெற்றன; நடைபெறவிருக்கின்றன. இவையாவும் மகிழ்ச்சிக்குரியவே.

மீமிசைச் சுருங்கியே வந்தோர்—விலங்கலாகிய தலமெலாம் பரவியே வியப்ப' என்றது கந்தபுராணம். அச்சுருங்கிய மலையே இப்போதிருக்கும் அண்ணாமலை. இச்சுருங்கிய நிலையிலேயே அரிபிரமர் அடிமுடி தேடச்சென்ற காலத்திலும் அம்மலையிருந்ததெனக் கோடல் மயக்கமே.

2. ஆ:— 'விச்வம் நாராயணம்' (நாராயணர் விசுவமாகிறார்) என்ற நாராயணத்தால் விசுவத்திலடங்கிய அம்மலையை நாராயணர் காணமாட்டாரென்பது தப்பு.

ச:—'விச்வாதிகோருத்ரோ மஹர்ஷி:' (விசுவத்தைத் தாண்டியவரான உருத்திரமகரிஷி) என்ற சுவேதாசுவதர, பஸ்மஜாபாலங்களால் விசுவாதிகராகிய சிவபிரான் கொண்ட அம்மலையினடியை விசுவமாகிய நாராயணர் காணவேமாட்டாரென்பது சரியே.

3. ஆ:— விஷ்ணுவென்ற பதத்திற்கே வியாபகமென்பது பொருள். எங்குமுள்ள ஹரி அம்மலையினடியிருந்த விடத்திலுமிருந்து அதைக்கண்டே யிருப்பர்.

ச:—வியாபகமென்றும் வியாப்பியமென்றும் வியாபகம் இருவகைப்படும். 'வ்யாப்யவ்யாபகா மித்யா ஸர்வமாத்மேதி சாஸகம்' என்பது யோகசிகை. 'வ்யாப்யதே வ்யாபயதே' என்பது ந்ருஸிம்ஹபூர்வதாபிநி. வியாபகம் மேவிடு நிறைவு. வியாப்யம் அதிலடங்கியநிறைவு. விஷ்ணுவியாபகமெல்லாம் வியாப்பியமேயாம். 'அந்தர் பஹிச்சதத்ஸர்வம் வ்யாப்ய நாராயண: ஸ்தித:' (நாராயணன் சகத்தினுள்ளும் புறமும் வியாப்பியமாயிருக்கிறான்) என்றது. ஆனால் சிவபிரானைச் சுவேதாசுவதரம் 'ஸர்வவ்யாபீச பகவான்...... சிவ:' (சிவபிரான் சர்வவியாபியான பகவான்) என்றும், அதர்வசிகை 'ஸர்வாந்லோகாந்வ்யாப்நோதி வ்யாபயதீதி வ்யாபநாத் வ்யாபீ மஹாதேவ:' (எல்லாலோகங்களையும் அடைகிறான். எல்லா லோகங்களையும் தன்னிடத்தில் அடையும்படி செய்கிறான். அதனால் மஹாதேவருக்கு வியாபியென்று பெயர்) என்றும் விளக்கின. சரபத்தில் 'பக்த்யா நம்ரதநோர் விஷ்ணோ: ப்ரஸாத மகரோச்சிவ:' என்றொரு வாக்கியமுண்டு. பாடபேதத்தாற் 'சிவ:' என்பது 'விபு:' என்றும் படிக்கப்படும். விஷ்ணு விபு வென்னு மிரண்டற்கும் வியாபகமென்பதே பொருள். ஆனாற் பக்தராகிய ஹரியை விஷ்ணு பதமும், பிரசாதராகிய சிவபிரானை விபுபதமுங் காட்டுகின்றன. அந்த ஸ்தானபேதத்தாலும் விஷ்ணுபதத்தாற் குறிக்கப்படும் ஹரி வியாபகம் வியாப்பியமே யென்பதும் விபுபதத்தாற் குறிக்கப்படும் சிவவியாபகமே வியாபகமென்பதும் விளங்கவில்லையா? ஆகவே வியாபகரான சிவபிரானது அடியை வியாப்பியரான விஷ்ணு காணுந்திறலற்றவரென்பதே துணிபாமென்க.

4. ஆ:—சடமாகிய ஒருதாழம்பூப் பேசியதென்ற ஒருபொய்யே அடிமுடி தேடியகதை முழுவதையும் பொய்யாக்கும்.

ச:—அடிமுடி தேடியசரிதம் வேதபடிதம். கந்தபுராணமுதலிய பெருநூல்களில் தாழம்பூச் சம்பந்தமில்லாமலே அச்சரிதம் வருகிறது. ஆகையால் அதை எந்தக்கிளைக்கதையும் பொய்யாக்கிவிடாது. மேலும் எல்லாவஸ்துக்களுக்கும் அதிதேவதைகளை யுடையன. அப்படியே தாழம்பூவுக்கும் அதிதேவதையுண்டு. தாழம்பூப் பொய் சொன்னதென்பதற்கு அதனதிதேவதை பொய் சொன்னதென்றே பொருள் கொள்ளவேண்டும். நான்கு வேதங்களுந் திரிபுரதகனகாலத்திற் குதிரைகளாகவும், அருச்சுனனுக்குச் சிவபிரான் கிராதவேடங்கொண்டு அருள்செய்யவந்த காலத்தில் நாய்களாகவும் மாறின. விஷ்ணுவின் பாலுள்ள கௌத்துபம் சங்குசக்கரம் முதலியன ஆழ்வார்களாக மாறி அநேக அவைதிகங்களைப் பரப்பின. வேதம், கௌத்துபம், சங்கு, சக்கரம் முதலியன அத் தாழம்பூப் போற் சடங்களே. குதிரைகள், நாய்கள், ஆழ்வார்களெல்லாஞ் சித்துக்கள். அச்சடங்கள் இச் சித்துக்களாக மாறவல்லனவா? அல்லவேயல்ல. அவ்வவற்றின் அதிதேவதைகளே அச்சித்துக்களாக மாறின. இப்படியே அத்தாழம்பூக் கதைக்குஞ் சமாதானந் தெரிக.

5. ஆ:—அண்ணாமலைக்குப் பழம்பெயர் சுதர்சநகிரியென்பது. அது ஒருவைஷ்ணவ க்ஷேத்திரம். சைவசமயாபிமானியாகிய வல்லாள மகாராசனென்பவன் அங்கிருந்த வைஷ்ணவர்களைத் துரத்திவிட்டு அம்மலையை அண்ணாமலையென்றாக்கிச் சிவசம்பந்தப் படுத்திவிட்டான்.

ச:—இக்கதையைக் கூறுஞ்சுவடி கூரேசவிஜயம். இதன் மறுப்பைக் கூரேச விஜயபங்கத்திற் பரக்கக்காண்க. அவ்விஜயம் 'வராஹமூர்த்தியும் அப்படியே அந்த சுதர்சனகிரியைத்தம்முடைய கோரதந்தங்களினாலே பேர்த்தெறிந்தது மல்லாமல்......' என்றது. பூர்வபட்சங்கூறுமாறு சுதர்சநகிரி அங்கிருந்திருந்தாலும் ஒருபன்றி அதைப்பிடுங்கி எங்கேயோ எறிந்துவிட்ட செய்தியுந் தெரிகிறது. அப்பன்றியும் விஷ்ணுவா லனுப்பப்பட்டதே. ஆகவே அச்சுதர்சநகிரியே இவ்வண்ணாமலை' யென்பது மடமை. 'இப்படியிருக்க மேற்படி திவ்யதேசம் இப்போது சிவஸ்தலமாய்ப் போனதற்குக் காரணமென்ன வெனில், முன் வல்லாள ராஜனென்னப்பட்டவன் சிவபக்தனா யிருக்கையில், அந்தப்பர்வதத்தினருகே அடி அண்ணாமலை ......ஆலயத்திலிருந்த சிவனுக்கு......மகாவிபவமாய் உற்சவஞ் செய்கிறதை, மேற்படி அக்ரஹாரத்தி லிருக்கிற வைஷ்ணவர்கள் கண்டு சஹிக்கமாட்டாமல், ரிஷபவாஹனத்தையுஞ் சிவனையும் சின்னாபின்னம் பண்ணினதின் பேரில், மேற்படி வல்லாளராஜன் அதிகக்

கோபங்கொண்டு மேற்படி வைஷ்ணவர்களுடைய அக்ரஹாரங்களை இடித்துக் குளம்பறித்து எரியாக்கிவிட்டான்...' என்ற அச்சுவடியால் வைஷ்ணவர்களே அபிமானிகளா யிருந்தார்களென்பதும், அவ்வூர் எப்போதுமே சிவஸ்தலமென்பதும், அரசன் செய்தது தண்டனையேயென்பதும் பிறவும் ஸ்பஷ்டம்.

---

18. ஜந்மத்வம்ஸாத்யபாவாத்.
பிறப்பிறப் பாதி யுயிர்க்குண மின்மையின்.

பொருள்:— உயிர்களுக்கே யுரிய பிறப்பு இறப்பு என்னுங் குணங்கள் தனக்கு இல்லாமையானும் என்பது.

உயிர்களுக்கே கர்ப்பவாச முண்டென்பதும் அதுவுங் கர்மவசமே யென்பதும் கடவுளுக்குக் கர்ப்பவாசம் எக் காரணத்தாலுங் கிடையாதென்பதும் சர்வாங்கீகாரமான கிரமம். ஒருசாரார் கடவுளுக்குங் கர்ப்பவாச முண்டென்றும் அஃதவரிச்சை வசமென்றும் சொல்லுவர். அவர்கொள்கைப்படிக் கர்ப்பவாசத்துக்குக் கர்மவசமும் இச்சைவசமுமென இரண்டுகாரணங்களுளவென்ப தேற்படுகின்றது. அவை யிரண்டும் பிரத்தியக்ஷங்களல்ல. அன்றியும் ஒரு காரியத்துக்குத் தம்முட் சம்பந்தமில்லாத பல காரணங்களிருந்தனவாயின் இதுதான் உண்மைக்காரணமென வொன்றை நிச்சயிப்பது அசாத்தியம். ஆகையால் கர்மவசப்பட்டுக் கர்ப்பவாசம் பண்ணியவோருயிர் தான் இச்சைவசப்பட்டுக் கர்ப்பவாசம் பண்ணியதாகச் சொல்லலாம் அதைப்பொய்யென நிரூபித்தல் யாங்ஙனம்? கடவுள் இச்சைவசப்பட்டுக் கர்ப்பவாசம் பண்ணுவாரென்ற கொள்கையே அறிஞருக்கு அவ்வேலாமையைக் கொண்டுவந்து விடுகிறது. இப்படிக் கிரமங்களைக் கெடுப்பது கடவுளியல் ஆகாது.

கடவுள் பிறந்தபின் செய்த அற்புதச் செயல்களையும் பிறப்பதற்குமுன் தாம் பிறக்கப்போவதாகச் சொல்லியிருக்கும் வாக்கியங்களையும் ஆதாரமாகவைத்துப் பிறந்த கடவுளைப் பிறந்தவுயிர்களினின்றும் பிரித்துக்காட்டி விடலாமென்பர் அச்சாரார். கடவுள் செய்தனவாகவுள்ள அற்புதங்கள் பலவற்றினும் ரிஷிகள் செய்தனவாகவுள்ள அற்புதங்கள் சரிதங்களில் ஏராளம். ஆகையால் அற்புதங்கள் ரிஷிகளையும் கடவுளென நாம்மயங்கும்படி செய்யும். அவை கடவுளைத் தனித்துக் காட்டவல்லனவாகா. கடவுள் பிறக்குமுன் தாம் பிறக்கப்போவதாகச் சொல்லியுள்ள சரிதங்கள் கடவுளுக்குக் கர்ப்பவாச முண்டென்றகொள்கை யுடையார்க்கே நம்பத்தகுந்தன. அதைக்கொண்டு ஒருபெரிய நியமத்தைப் புரட்டிவிட முடியாது. ஆகவே கர்ப்பவாசமொன்றே உயிரையும், அஃதின்மையே கடவுளையும் பிரித்துக்காட்டவல்லன. இவ்வுண்மையைக் கண்டே ஸ்ரீமத்

சிவஞானசுவாமிகளும் 'நால்வகை யோனியுள் ஒரு யோனிவாய்ப் பட்டுப் பிறப்பனயாவை, அவையெல்லாஞ் சீவவர்க்கம். அவ்வாறு பிறத்தலில்லதி யாது அது பதிப்பொருளொன்று மிதுவொன்றே எனைச் செயல்களான் வேற்றுமையறிய வாராத வவ்விரண்டற்குந் தம்முள் வேற்றுமையறிய நிற்பதாகலின், எனைத் தேவரெல்லாம் அங்ஙனம் பிறந்திறத்தல் கேட்கப்படுதலானும், சிவனொருவனே வினைவயத்தனாதலின்றி அவ்வத் தேவரிடமாக நின்று உயிர்கட்கு அவற்றையறிந்து கூட்டவல்லுவன்; எனைத்தேவர் அது செய்ய மாட்டாரென்பது தானே போதருமென்பதாம்' என்று விரித்தருளினார்கள். இனிக் கர்ப்பவாசத்தை அநுசரித்தே மரணமும். 'தோற்றமுண்டேல் மரணமுண்டு,' 'பிறந்தன இறக்கும்' என்பன திருமுறைகள். இத்தகைய ஜனன மரணங்களில்லாதவர் சிவபிரானொருவரே. ஆகலின் அவரே மெய்க்கடவுள். விஷ்ணுமுதலிய பிறரெல்லாம் பிறந்திறப்பவர்களே. ஆகலின் அவர்களெல்லாம் உயிர்கள்.

'அஜாத இத்யேவம் கச்சித் பீரு: ப்ரபத்யதே | ருத்ர யத் தே தக்ஷிணம் முகம் தேநமாம் பாஹி நித்யம்' (ஜனனமரண ஸம்ஸாரத்துக்குப் பயந்த ஒருவன் நீ பிறக்காதவனென்றே உன்னை வழிபடுகிறான். ஏ ருத்ரா! எது உனது தென்முகம் அதனால் என்னை நித்தியமுங் காப்பாயாக), 'அஜ:' (பிறப்பில்லாதவர்) என்ற சுவேதாசுவதரமும், சிவபிரானுக்குரிய அமிருதநாமமும், அவர் எமனை உதைத்துருட்டிய சரிதமும் அவ்வுண்மைக்கு மூலவசனங்கள்.

இனி அவ்வுண்மைபற்றிய ஆக்ஷேபசமாதானங்கள் வருமாறு:-

1. ஆ:—உருத்திரன் ஒருகாலத்தில் பிரமாவின் புருவநடுவிலும் மற்றொருகாலத்தில் விஷ்ணுவின் கோபத்திலும் பின்னொரு காலத்தில் அவரின் வேர்வையிலும் பிறந்தான். அவனைப் பிறவாதவனென்றல் யாங்ஙனம்?

ச:—அங்ஙனம் பிறந்தவன் சதுர்த்த ருத்திரனல்லன். இன்னானென்பது முற்கூறப்பட்டது. மேலும் 'நாலு யோனியினின்றெழு நவில்வகைத் தோற்றமாக—வேலுமெண்பத்து நான்கிலக்கமா முயிர்ப்பேதங்கள்' என்ற கூரேசவிஜயப்படி பிரமாவின் புருவநடுவும் விஷ்ணுவின் கோபமும் அவ் யோநிபேதங்களுட் சேருமா? பூர்வபட்சம் விஷ்ணுவை அப்ராகிருத சரீரியென்பதால் அவ்வியர்வையும் அவ்யோனிகளுள் ஒன்றாதலில்லை. ஆகவே அந்த வுருத்திரனும் அவ்விடங்களிற் பிறந்ததை நரசிங்கம் தூணிற் பிறந்ததைப் போலக் கொள்வதே சரி. தூணுமா யோனி? நரசிங்கம் பிறந்ததால் தூணுக்கென்ன பெருமை? அப்படிப்பட்ட தோற்றங்களையெல்லாம் பிறப்பென்பதற்கு வெளிப்பாடென்றே கொள்ள வேண்டும்.

2. ஆ:—விஷ்ணு பிறக்கமாட்டார். தசாவதாரங்களும் அவர்கலைகளே. கலை—அம்சம். அவ்வம்சங்களே பிறக்கும்.

ச:—அந்த அம்சங்கள்பிறந்தது கருமத்தாலா? இச்சையாலா? கருமத்தாலெனின் அவைகளெல்லாம் உயிர்களே. அவற்றைக் கடவுளெனல் உபசாரமாகவே முடியும். இச்சையாலெனின் அத் தசாவதாரங்களைக்கலைகளெனக்கீழ்ப்படுத்தவேண்டாம்: கலைகளையுடையவராகிய விஷ்ணுவென்றே சொல்லிவிடலாம். கடவுள் இச்சைவசத்தாற் பிறக்கலாமென்பது பூர்வபட்சத்துக்கு உடம்பாடுதானே. இப்போது அந்தப்பிறப்பை அம்சங்களின் தலையிற் சுமத்தி அம்சியை மெல்லத் தப்பவைக்கப்பார்ப்பது பூர்வபட்சத்துக்கு ஒருதோல்வித்தான மன்றோ? இனி விஷ்ணுவுக்கு மரணமுளதாதல் ராமரின் சரயுநதி வீழ்ச்சியாலும், கிருஷ்ணர்மேல் வேடனின் பாணப் பிரயோகத்தாலும் ஊர்ஜிதம்.

19. வாராணஸ்யாஞ்ச பாராசர நியம புஜஸ்தம்பநாத்.

கங்கைசூழ் கிடந்த காசிமால் வரைப்பிற்
போய்புகல் வியாதன் கைதம் பித்தலின்.

பொருள்:—கங்கையாற் சூழப்பட்டு நடுவிலுள்ள காசியென்னும் பெரிய தலத்திற் பொய்சொன்ன வியாசருடைய கைகள் ஸ்தம்பித்தலானும் என்பது.

கலியாரம்பத்திற் காசியில் எல்லா முனிவர்களுங் கூடினார்கள். வியாசரும் அங்கு வந்தார். அம்முனிவர்கள் அவரை உபசரித்து 'வியாசரே! வேதம் புராணம் முதலிய பலகலைகளையும் அறிந்த நீர் அவற்றின் ஸாரத்தைத் திரட்டி ஒரு வாக்கியத்தில் எமக்குச் சொல்லும்' என்று கேட்டார்கள். வியாஸர் ஸர்வ சாஸ்திரங்களுங் கேசவனை பரப் பொருளென்று சொல்லுமென்றார். வைதிகங்கள் அப்படிச் சொல்லவில்லையென்ற வுணர்ச்சியையுடைய முனிவர்கள் அதைக்கேட்டதும் வெருவிவிட்டார்கள். பிறகு அவர்கள் அவரைப் பார்த்து 'உமது தீர்ப்பைவிசுவநாதர் சந்நிதியில் வந்துசொல்வீரா?' என்று கேட்டார்கள். சொல்வேனென்றாரவரும். சிறிதுபொழுதில் விசுவேசர் சந்நிதியில் முனிவர்களெல்லாங் கூடினார்கள். வியாஸரும் அங்கு வந்து நின்றார்; கைகளை உயரத்தூக்கினார்; முன் சொன்னதைச் சொல்லிப் பிரமாணமும் பண்ணினார். உடையான் முன்வந்து நின்றுகொண்டு உடையனல்லாதானை உடையனெனப் பொய் கூறியதைக் கேட்ட நந்தி குபிதராகி அத்தூக்கிய கைகள் அவ்வண்ணமே அசைவற நிற்கும்படி சபித்தார். அவைகளும் அப்படியே ஆயின. எல்லா முனிவர்களும் ஹரஹரவென்றாரவாரித்தார்கள். வியாஸர் அப்போதும் விஷ்ணுவையே நினைத்தார்.

விஷ்ணு வந்து அவருக்கு நல்லபுத்தி சொல்லவேண்டியதாயிற்று. சிவபிரானே பரம்பொருளென்ற சத்தியஞானம் வியாஸர் மனதில் அவ்வுபதேசத்துக்கப்புறந்தான் புகந்தது. வியாஸர் வெள்கிச் சிவபிரானிடம் அபராத க்ஷமை வேண்டினார். அஃதருளப்பட்டது. கைகள் சீர்ப்பட்டன. வியாஸர் உய்ந்தார். இக்கதை காஞ்சிப் புராணத்துள்ளது.

'பராத் பரதரம் ப்ரஹ்ம யத்பராத்பரதோ ஹரி: தத்பராத் பரதோ ஹீசஸ் தஸ்மாத் துல்யோதிகோ நஹி' என்ற சரபம் அக்கதைக்கு மூலவசனம்.

இனி அக்கதைபற்றிய ஆக்ஷேப சமாதானங்கள் வருமாறு:—

1. ஆ:— 'ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே | ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே இதிஷோடசகம் நாம் நாம் கலிகல்மஷ நாசநம்' என்ற கலிஸந்தாரணத்தால் விஷ்ணு நாமங்களை கலிதோஷ நிவிர்த்தி செய்யவல்லனவென்பது தெரிகின்றது. ஆகலினன்றோ உருத்திரன் முதலிய தேவர்களும் நாரதர் முதலிய முனிவர்களும் தமக்குக் கீழ்ப்பட்டவர்களுக்கு அந்த நாமங்களையே உபதேசித்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படியிருக்க, விஷ்ணுவைப் பரமென்றல் எப்படிப்பொய்யாகும்?

ச:— அந்தக் கலிஸந்தாரணந்தானே 'யதாஸ்ய ஷோடசிகஸ்ய ஸார்த்தத்ரிகோடீர் ஜபதி ததா ப்ரஹ்மஹத்யாம் தரதி' என்று அந்நாமங்களை மூன்றரைக்கோடி உரு ஜபிக்கச் சொல்லுகிறது. அப்படி ஜபித்தாலும் கிடைப்பன கலி பிரமஹத்திமுதலியவற்றின் நிவர்த்திகளாகிய ஸாமானிய பலன்களே. ஒரு நாளுக்கு ஆயிரம் உருவீதம் ஜபிப்பதானால் மூன்றரைக்கோடிக்கும் ஏறக்குறைய நூறுவருஷங்களாகும். அந்நாமங்களை அத்துணை நெடுங்காலம் ஜபிக்கவேண்டுமென்பது அந்நாமங்களின் பலவீனத்தைக் காட்டவில்லையா? அங்ஙனமாக அந்நாமங்களை உருத்திரர் நாரதர் முதலியோர் உபதேசிக்கின்றனரென்பதும் அதனால் அந்நாமங்களையுடைய விஷ்ணு பரமே யென்பதும் ஸர்வத்ர அவைதிகமேயாகும்.

2. ஆ:— பரம்பொருள் யாரென்று கண்டறியப் பிருகு முனிவர் முதலிற் கயிலை சென்றார். சிவன் அவரைக் கண்டதுங் கோபித்தான். பிருகு திரும்பிச் சத்தியலோகம் போனார். அங்குப் பிரமா அவருக்குக் கொஞ்ச மரியாதை செய்தான். பிறகு அம்முனிவர் வைகுண்டம் புக்கார். விஷ்ணு அவரை எதிர்கொண்டழைத்து வெகுகனமான உபசாரம் பண்ணினார். அத்தனையையும் ஏற்ற பிருகு மிக மகிழ்ந்து தம்மையனுப்பிய முனிவர்களையணுகி

அவர்களிடம் சிவன் தம்பால் கோபங் கொண்டதால் தாமஸியென்றும், பிரமா சிறிது மரியாதை காட்டியதால் ராஜஸியென்றும், விஷ்ணு கனமான மரியாதை காட்டியதால் சாத்விகியென்றும் கூறி விஷ்ணுவே அதனாற் பரம்பொருளென்று தீர்ப்புக்கூறினாரே. அவருக்கேன் எதுவுந் தப்பிக்கவில்லை?

ச:— இஃதொரு பரிஹாஸாஸ்பதமான கதை. கடவுளுக்கு உயிர்கள் மரியாதை செய்யவேண்டுமா? உயிர்களுக்குக் கடவுள் மரியாதை செய்யவேண்டுமா? என்ற வியவஸ்தை கெட்டவனெழுதிய கதையே அது. இக்கதையின் விரிவையும் அதன் விரிந்த கண்டனத்தையும் 'பாஞ்சராத்திர மதசபேடிகை யென்னுஞ் சைவசூளாமணி'யிற் கண்டு களிக்கலாம்.

3. ஆ:— சுகப் பிரமரிஷி பாகவதஞ் செய்து விஷ்ணு பரத்துவஞ் சொன்னது பொய்யா?

ச:—சாந்தி 331-வது அத்தியாயம் "அவர் (வியாஸர்) 'வீர்யமுள்ள புத்திரன் எனக்கு உண்டாக வேண்டும்' என்கிற ஸங்கற்பத்தோடும்......மஹாதேவரைப் பிரார்த்தித்தார்", "முக்கண்ணர்......அவரை நோக்கி, 'த்வைபாயனரே! உமக்கு....புத்திரன் உண்டாகப்போகிறான்'......என்று சொன்னார்" என்றும், 339வது அத்தியாயம் 'அந்தச்சுகர் பிதாவைவிட்டு விட்டு......கைலைமலையின் உச்சியை அடைந்தார்' என்றும், 341-வது அத்தியாயம் "மஹாதேவர்......வ்யாஸரை நோக்கி 'முன்காலத்தில் நீர்......புத்திரனை என்னிடம் வரித்தீர்......அந்தப் புத்திரன்...என்னுடைய அநுக்கிரகத்தினாலும்......சுசியுள்ளவனுமானான். அவன்......பரமமான கதியை அடைந்தான்...நீரும் என்னுடைய அனுக்கிரஹத்தால்...உம்முடைய புத்திரனுக்குச் சமமான நிழலைப் பார்ப்பீர்'..........என்றுசொன்னார்" என்றும் சொன்னதாற் சுகருக்கு அவர் ஜனனமுதல் மோக்ஷபரியந்தம் சிவ சம்பந்தமுண்மை வெளியாம். அவர் தந்தையாகிய வியாஸருஞ் சிவப்பிரசாதியே யென்பதுங் கண்டு கொள்க. இப்பாரதப் பகுதி உபப்பிரம்மணம். இதற்குச் சுருதி சுகரஹஸ்ய மென்னும் உபநிஷத்து. அதில் 'சுக உவாச தேவாதி தேவ ஸர்வஜ்ஞ ஸச்சிதாநந்த லக்ஷண உமாரமண பூதேச ப்ரஸீத கருணாநிதே || உபதிஷ்டம் பரப்ரஹ்ம ப்ரணவாந்தர்கதம்பரம் | தத்வமஸ்யாதி வாக்யாநாம் ப்ரஜ்ஞாதீநாம் விசேஷத:|| ச்ரோதுமிச்சாமி தத்வேந ஷடங்காநி யதாக்ரமம் | வக்தவ்யாநி ரஹஸ்யாநி க்ருபயாத்ய ஸதாசிவ||' (தேவாதி தேவனே! ஸர்வக்ஞனே! ஸச்சிதானந்த லக்ஷணனே! உமாரமணனே! பூதேசனே! கருணாநிதியே! என்னைக் குறித்துத் தயவு செய்வாய். பிரணவாந்தர்கதமான மேலான பரப்பிரமம் உபதேசிக்கப்பட்டது. தத்வமஸியாதி

வாக்கியங்களினுடையவும், பிரச்னோத்திகளினுடையவுமான சாரமானது உபதேசிக்கப்பட்டது. ஆனால் கிரமமாக உண்மை ஷடங்கங்களைக் கேட்க இச்சிக்கிறேன். சதாசிவனே! தயவினாலே இப்போது ரஹஸ்யங்களெல்லாம் சொல்லத் தகுந்தன என்று சுகர் சொன்னார்) என வருவது சுகர் சிவபிரானிடமே உபதேசங் கேட்டாரென்பதையும், 'உபதிஷ்ட: சிவேநேதி ஜகத்கம்யதாம் கத: | உத்தாய ப்ரணிபத்யேசம் த்யக்தா சேஷ பரிக்ரஹ: || பரப்ரஹ்மபயோராஸௌ ப்லவந்நிவ யயௌ ததா ப்ரவ்ராஜந்தம் சமாலோக்ய க்ருஷ்ணத்வைபாயநோ முநி: || அநுவ்ராஜந்நா ஜுஹாவ புத்ரவிச்லேஷகாதர: | ப்ரதிநேதுஸ்ததா ஸர்வே ஜகத் ஸ்தாவரஜங்கமா: ||' (இந்தப் பிரகாரம் சிவனால் உபதேசிக்கப்பட்ட சுகரானவர் லோகத்தினுடையவும் தத்து என்பதற்குப் பொருளான ஈசுரனுடையவும் மயமாக ஆய்விட்டார். எழுந்திருந்து ஈசனை நமஸ்கரித்து அவ்விடத்தைவிட்டு ஈசுவரனைக் கடைப் பிடித்துக்கொண்டு பரப்பிரமமாகிற அந்தச்சமுத்திரத்தில் மிதக்கிறவர்போல அப்போதுபோனார். போகிற அந்தப் பிள்ளையைப் பார்த்துப் பிள்ளையின் பிரிவால் பயந்திருக்கிற வியாஸ ரிஷியானவர் பின்தொடர்ந்து கூப்பிட்டார். அப்பொழுது ஸ்தாவர ஜங்கமரூபமான ஸமஸ்தலோகமும் பதில் சொன்னது) என வருவது சிவபிரான் சுகருக்குச் சிவ ஸாயுஜ்யத்தை யடையத்தக்க உபதேசத்தையே செய்தாரென்பதையும், 'தத்வ மஸீத்யபேத வாசகமிதம் யே ஜபந்தி தே சிவஸாயுஜ்ய முக்தி பாஜோ பவந்தி' (தத்துவமசி யென்கிற அபேத வாக்கியத்தை எவர்கள் செபிக்கிறார்களோ அவர்கள் சிவஸாயுஜ்ய முத்தியை அடைந்தவர்களாகிறார்கள்) எனவருவது அச்சுகர் அவ்வுபதேசத்தின் பின்னர்ச் சிவஸாயுஜ்யமாகிய சிவமயமாதலையே யடைந்தா ரென்பதையும் காட்டுகின்றன. அத்தகைய சுகர் விஷ்ணு பரத்துவ புத்தியுடையவராயின் தந்தைபோல் தண்டிக்கவும் படுவர். பிருகிருதாசாரத்திலிருந்துவரும் கிருஷ்ணபாகவதத்தை ஜயதேவரென்பவரின் சகோதரரான போபதேவரென்பவர் செய்தாரென்பதும் சுகர் செய்யவில்லை யென்பதும் 'சிவபாரம்யப் பிரதீபினி' முதலிய நூல்களில் நன்கு விவகரிக்கப்பட்டிருத்தல் காண்க.

4. ஆ:— வியாஸரின் கைதம்பித்த கதை மோகன நூற் கூறிற்றுன் பிரசித்தம்.

ச:— மோகன நூல் மோகன நூல் என்றபித்துரை முன்னுங் கண்டிக்கப்பட்டது. எல்லாவுயிர்களுக்கும் முத்தி கொடுத்துவிட்டால் இவ்வுலகம் நடைபெறுதென்று கருதி விஷ்ணு இவ்வுலகை நடத்துவதற்காகவே பல அந்நிய மதங்களை வகுத்துப் பல மக்களை அவற்றுட் புகுத்தி மோகிப்பிக்கிறரென்று 'போற்றி மற்றோர் தெய்வம் பேணப் புறத்திட்டுமை யின்னே-தேற்றிவைத்த தெல்லீரும்

186960

செய்தித்திரட்டு.

திருத்தென்குடித்திட்டை:—மாணிக்கவாசகர் குருபூசை சித்தாந்தவித்தியா சாலையில் ஆனிமீ உஅஉ நடைபெறும். சிவநேசநிலையத்திலிருந்து "சிவநேசன்" திங்கட்டாள் இவ்வாண்டு ஆவணிமுதல் தொடங்கி வெளியிடப்பெறும்.

காரைக்குடி:—ஸ்ரீபெரியநாயகிசமேதஸ்ரீநாகநாதசுவாமிதிருவிழா, ஈசுவரவூ ஆனிமீ 5உ முதல் 14உ வரை நடைபெற்றது. இறைவன் வழிபாட்டில் தலைசிறந்தவரும், இந்நகர் ஜஜுர்வேத பாடசாலை அதிபருமான திருவாளர், பழ. செ. மு. முத்துக்கருப்பஞ்செட்டியாரவர்கள்பல்லாண்டுகளாகப்பல பெரியார்களை வரவழைத்துப் பாராயணத்தை நடத்திவந்ததுபோல் இவ்விழாவிற்கும் தமிழ்மறையை இசையுடன் பெரும் பொருட் செலவில் தக்கார் பலரை வரவழைத்துநடத்தியும், 6-ம்திருநாள் மாலை5மணிமுதல் 10மணிவரை திருநாளைப்போவார் என்னும் புராண புண்ணிய "நந்தனார்" கதாகாலக்ஷேபம் தமிழ் மொழியில் சிவஸ்ரீ இ. சுப்பிரமணிய ஓதுவாமூர்த்தியவர்களைக்கொண்டு இன்னிசைக் கருவிகளுடன் நடத்தியும் ஒவ்வொருநாளும் அன்பர் பலர் கேட்டு மகிழும்படி செய்தார்கள். இச்சிவபுண்ணியத்திருவாளர் இறைவனருளால் நிறைபெருஞ் செல்வராய் நெடிது வாழ்வாராக.

புதுவை:— ஸ்ரீ சிதம்பரம்பாதபூஜை அம்பலத்தாடும் சுவாமிகள் மடாலயத்தில் ஞானதேசிக மகா குருபூஜை ஆனிமீ எஉ மஹாபிஷேக நைவேத்திய தீபாராதனை மகேஸ்வர பூஜை மகோத்சவம் ஆகிய வைபவங்களுடன் கொண்டாடப் பெற்றது. உஅஉ மகநாள் ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் குருபூஜையும் மகோற்சவமும், கூ0உ ஸ்ரீமந் நடராஜப்பெருமானுக்கும் சிவகாமிசௌந்தரிக்கும் திருமஞ்சனமும் செய்யப்பெறும்.

கொழும்பு:— ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி சர்வாபரண அலங்கிருதராய் சுவர்ண ரதாரோகணராய் ஆடிமீ எஉ காலை ௬-மணிக்கு மேளதாள விருதுகளுடன் அடியார் குழாங்கள் ஹரஹரவென்று துதிக்க வெழுந்தருளி வெள்ளவத்தையை யடைந்து அங்கு திவ்யாலங்காரமாக வமைத்துள்ள ஆலயத்தில் திருவீற்றிருந்து அடியார்களின் வழிபாடுகளையுவந்தும் அஉ எண்டிசைகளிலிருந்தும் வரும் பக்தகோடிகளின் ஆராதனைகளைக்கொண்டு கதிர்காமக் காக்ஷியருளியும் எஉ முதல் ௪0உவரை விமரிசையாக நடைபெறும் மகேஸ்வர பூஜையைக் கடாக்ஷித்தும் ௪0உ மாலை நான்குமணிக்குச் சர்வாபரணபூஜிதராய் தங்கரதத்திலாரோகணித்து மகாவைபவங்களுடன் தமதிருக்கை சேர்ந்தருளுவர். சிவகுருநேசச் செல்வர்கள் வந்து தரிசித்துக் கதிர்வேலாயுதக் கடவுளின் நிறையருள் பெற்று வாழ்க. என பழைய கதிர்வேலாயுதசுவாமி கோயில்நகரத்தார் திருமுகம் வழங்கி அழைக்கின்றார்கள்.

கண்டவராயன்பட்டி:— பணிச்சாருடையவர் தருமகலாசாலையின் ஏழாவது ஆண்டு நிறைவுவிழா, வைகாசி உகஉ மதுரைத்தமிழ்ச்சங்கக்காரியதரியும் உயர்நீதிமன்ற வழக்கறிஞருமாகிய உயர்திரு, N. R. கிருஷ்ணசாமி ஐயங்கார் B. A. B. L. அவர்கள் தலைமையில் அறிவின்மிக்க பெரியார்களின் விரிவுரைகளும் மாணவர்களின் கட்டுரைகளும் நிகழ்த்தித் தலைவர் சி. உ. ராம. இராமசாமிச் செட்டியாரவர்களால் இனிது நடத்தப்பெற்று நிறைவேறியது.

OFFICE OF THE ...
8-JUL 1937
MADRAS

சிவநேசன்.

எச்சரிக்கை.

கலியின் வலியால் மக்களை வஞ்சித்துப் பொருள் பறிக்கும் போலிச் சாமியார் பலர் மலிந்துள்ளார்கள். சில ஆண்டுகளுக்குமுன் திருப்பாலைக்குடி மஸ்தான் என்றஒருவரின் சூழ்ச்சியில்மயங்கிய மக்களடைந்த பலன் காரியுமிழப் பெற்றதேயன்றிப் பிறிதன்று. செந்துறைப் பையையா சித்திகளும் செப்படி வித்தை யொப்பவே முடிந்தன. வங்கத்திலை, வல்லிரும்பை, வெண்பித்தளையை மாற்றுயர்ந்த தங்கமாக்குவதாக வஞ்சித்துப் பொருள்கவர்ந்த சித்த சுவாமிகளும் எண்ணிலராவர். இவ்வாறு ஏத்திப் பிழைக்கும் சித்தர்களைக்கண்டு ஏமாறாதிருக்க வேண்டுவது மக்களின் கடமையாகும்.

குன்றக்குடிக்கணித்தான பழநியாயூருணிக் கரையில் ஒருவர் எங்கேயோ இருந்து இறங்கி வந்ததாகக் கைரேகைபார்ப்பதாகக் குறிசொல்வதாகத் தோஷபரிகாரம் செய்வதாக நினைத்தகாரியங்களையெல்லாம் நிறைவேற்றுவிப்பதாகக் கூறி மக்களை மயக்கிச் சேவல், கோழிமுட்டை, மது, மாமிசம், பாத்திரபண்டம், பண முதலியனவெல்லாம் காணிக்கையாகப் பெறுகின்றனர். நீ கும்பிடும் தெய்வம் சாம்பிராணிப் புகையேற்பது என்று கூறிவிடுவது இவருடைய அபாரசக்தியாம். இந்தச் சாம்பிராணி கூறும் ஏனையவும் இத்தன்மையனவே. மக்களைமயக்கப்பயங்கரப் பொம்மைகள் பல வைத்துக்கொண்டிருக்கிறார். வஞ்சியர் தாமும் மஞ்சள்பூசமறுக்கும் இக்காலத்தில் இவர் மஞ்சள்பூசி, வரத்திற்காக வரும் ஆடவர்க்குங்கூட மஞ்சள்பூசி மயக்குகின்றனர். மதுமாமிசாதிகளை வயிராறவுண்டு களித்து மயங்கிக்கிடக்கும் இப் பொம்மலாட்டுப் பெரியாருக்கு, மதுமுட்டைச்சாமிகளென்று அபிதானம் சூட்டலாமென்கின்றனர் அறிவாளிகள். தகுந்ததும். இலச்சைகெட்ட இச்சாமியாரும் இவரது சீடர்களும் பழிபாவங்களுக்குஆளாகாமல், உண்மையான அடியார் வேடத்திற்கு இழிவு தேடாமல், யாரையும் ஏமாற்றாமல், மதியீனத்தால் மக்கள் இப்போலிகளைக்கண்டு மயங்கி ஏமாறாமல் இருக்க, இச்சித்தசுவாமிகள் இவ்விடம்விட்டுப் பெயர எச்சரிக்கை எச்சரிக்கை முக்காலும் எச்சரிக்கை.

நன்மை நடி.

பதினோராவது ஆண்டுமுதல்
"சிவநேசன்" ஆண்டுத்தொகை விவரம்.

உள்நாட்டிற்கு	ரூ 1--8--0	அதற்கு மூலதனம்	ரூ 30--0--0
அயல்நாட்டிற்கு	ரூ 2--0--0	அதற்கு மூலதனம்	ரூ 40--0--0

தனிப்பிரதி அணா 0—2—0

விளம்பரவிகிதம்.

வியாபார விளம்பரம் பக்கம் 1-க்கு ரூ 4—0—0

நீதிமன்ற விளம்பரம் பக்கம் 1-க்கு ரூ 8—0—0

பலவான்குடி 'சிவநேசன்' அச்சியந்திரசாலையில், பத்திராதிபர்
ராம. சு. ராம. இராமசாமி செட்டியாரால் அச்சியற்றிவெளியிடப்பெற்றது.